


noolaham.org | aavanaham.org

# குறள் வழி



நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

பொருள் : நல்வினையாலுண்டாகும் இன்பங்களை இனியவை என்று விரும்பி நுகர்கின்றவர்கள் தீவினை விளையும் காலத்து துன்பங்களை அவ்வாறே மனம் மகிழ்ந்து நுகராது மனம் வருந்துவது ஏன்? (379)

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

பொருள் : ஊழினும் பார்க்க மிக வலிமையுடையவை எவை இருக்கின்றன? அதை விலக்குவதற்கு ஏற்ற உபாயத்தைச் செய்தாலும் அதனைத் தடைப்படுத்திக்கொண்டு அது முன்னே நிற்கும். (380)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**ஈழநாடு வாழவந்த சிவதொண்டன்**



சூழமிக நினைத்துவினை யாற்றுமெங்கள் தொண்டன்
சோம்பலே பாவமென்று சொல்லுகின்ற தொண்டன்
கூழெனினும் கூடிக்குடி யென்றுசொல்லுந் தொண்டன்
கூச்சமின்றி யுலகத்திலே குடியிருக்குந் தொண்டன்
ஆழநினை யகம்பாவம் போகுமெனுந் தொண்டன்
அடியவர்கள் திருவடியைச் சிரசில்வைக்குந் தொண்டன்
வாழிமிக வாணிச்சிக்கா மண்சுமந்த மாறன்
மாபெருமை வழுத்துகின்ற மாண்புமிக்க தொண்டன். 03

நானென்னும் ஆணவத்தை நலியவைக்கும் தொண்டன்
நன்மைக்குந் தீமைக்கும் நடுவில்நிற்குந் தொண்டன்
தேனென்ன இதயத்தில் தித்திக்குந் தொண்டன்
சிவாயநம வென்றுதினஞ் செப்புகின்ற தொண்டன்
ஆணென்றும் பெண்ணென்றும் அறியாத தொண்டன்
அடியவரைத் தானாக ஆக்கிவிடுந் தொண்டன்
பேணாத மாந்தரையும் பிரியாத தொண்டன்
பெரியோர்கள் கருத்திலென்றும் பொருந்திவளர் தொண்டன். 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 312



2023 பொருளடக்கம் மார்கழி


| | | |
|---|---|---|
| உள்ளத்தனையது உயர்வு | கு. சிவபாலராஜா | 01 - 04 |
| ஆனந்தசாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 05 - 07 |
| உறங்குவதுபோலும்.... | பு. கதிரித்தம்பி | 08 - 09 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 10 - 12 |
| சித்தாந்தங்களும்... | இராம ஜெயபாலன் | 13 - 18 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 19 - 20 |
| சேக்கிழார் சுவாமிகள் | எஸ். குணாகரன் | 21 - 23 |
| நல்லூர் தேரடிச் சித்தர் | கு. சோமசுந்தரம் | 24 - 26 |
| சிவனாரும் சனிபகவானும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 27 - 28 |
| ஸ்ரீமான் குமாரசாமிப்புலவரின்... | கே.எஸ். சிவஞானராஜா | 29 - 33 |
| நமசிவாய மந்திரத்தின் மகிமை | திருமதி பொ. திலகவதி | 34 - 35 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 36 - 39 |
| திருமால் மருகா... | க.கு.க. சிவபாலன் | 40 - 43 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 44 - 47 |
| நாம சங்கீர்த்தனமே... | எம்.பி. அருளானந்தன் | - 48 |
| வருடாந்த திருவாசக விழா | தொகுப்பு | 49 - 51 |
| நீங்கா நினைவில்.... | | - 52 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:

Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.

Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# கார்த்திகை மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் கார்த்திகை மாத 311ஆவது மலருக்கான வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகாலத் தொடர்பில் உள்ளவரும், அதிபரும், சமாதான நீதவானுமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் ஆரம்ப உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றியதும் ஆற்றிக்கொண்டிருக்கும் சகல சமய சமுதாய பணிகளையிட்டு விதந்து கூறியதுடன் இப் பணிகள் யாவற்றுக்கும் சந்நிதி வேலவனது துணையே காரணமாகின்றது




என்பதை எம்மால் உணரக்கூடியதாக இருக்கின்றது. அதனடிப்படையிலேதான் ஞானச்சுடர் மலரும் 311 மாத காலம் தொடராக வெளிவந்துகொண்டிருப்பதும் ஒரு சாதனையாகவே கருதவேண்டியுள்ளது. அவ்வகையில் இம் மலரின் வளர்ச்சியை இட்டு நாம் மிகவும் மனம் மகிழ்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானச்சுடர் மலரின் வளர்ச்சிக்கு ஒரு வகையில் ஆன்மீக ஆக்கங்களை எழுதும் அன்பர்களின் முயற்சியையும் நாம் பாராட்டவேண்டியே இருக்கின்றது. ஆன்மீகம் சார்ந்த கட்டுரைகளிற்கு இம் மலர் ஒரு பெரிய தளமாகவே விளங்கும் காரணத்தால் ஆக்கங்களை எழுதுவோர் தம்முள் தோன்றிய கருத்துக்களை வெளிப்படையாகவே எழுத வருகின்றமையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம் மலரின் ஒவ்வொரு பக்கத்தையும் நோக்குமிடத்து பக்கத்தின் அடியில் ஒரு வரியில் வரும் சிந்தனையுடன் கூடிய கருத்துக்கள் மிகவும் ஆழமாகவும் அழகாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதிலும் குறிப்பாக அந்த அந்த



பக்கங்களில் வரும் கட்டுரைகளிற்கு அமைவாகவே கீழே காணப்படும் வரிகள் ஏதோ ஒரு வகையில் பொருந்தி இருப்பதையும் காணலாம் என்று கூறியதோடு மலர் சந்நிதி வேலவனது அருளோடு கூடி வெளிவருவதையிட்டு வெளியீட்டுரையோ, மதிப்பீட்டுரையோ அவசியமில்லை. ஆகையால் மலரின் தராதரத்தை அடியார்கள் ஆகிய உங்களிடம் விளக்கிக்கூறி இருக்கிறேன். இம்மலர் தொடர்ந்து பிரகாசிக்க சந்நிதி வேலவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்துக்கு நூலக வாரத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு நூல்கள் வழங்குவதற்காகவும், கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

பாடசாலையில் போதிக்கப்படும் கல்வி வாழ்க்கையுடன் இணைந்த கல்வியாக அமையவேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடத்திட்டங்களும் பாடப் போதனைகளும் இதற்கேற்ற வகையிலேயே அமைந்திருக்க வேண்டுமென்று திட்டமிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் பாடசாலையில் போதிக்கப்படும் சமயபாடக் கல்வியும் வாழ்க் கைக்குப் பயன்படவேண்டுமென்பதுடன் வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அமைந்திருக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும் அதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் அரிதாகவே காணப்படுகின்றன என்பதுடன் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சிந்தனையும் செயற்பாடும் குறைவாகவே உள்ளன.


பழைய காலங்களில் சைவப் பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகள் அருகில் உள்ள ஆலயங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களை ஆலயத்திற்கு அழைத்துச் சென்று வருதல், மற்றும் திருக்கேதீஸ்வரம், திருக் கோணேஸ்வரம் ஆகிய பாடல் பாடப்பெற்ற ஆலயங்களுக்கு கல்விப் பயணங்கள் மேற்கொள்வதை ஒரு வரையறையாகவே கொண்டிருந்தனர். தற்பொழுது நாட்டில் இடம்பெற்ற பலவித அசம்பாவிதங்கள் காரணமாக இத்தகைய செயற்பாடுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இவை மிகவும் கவலைக்குரிய விடயமாகவே கருதவேண்டி உள்ளது.

இந் நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி பாடசாலை பிள்ளைகளையும் சமய நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி இளம் வயதிலேயே அவர்களை எமது சமயம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நல்ல விடயங்களைப் பார்ப்பதற்கும் அதில் பங்கு பற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதன்மூலம் சமயம் எமது வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை உணரச்செய்து அதில் ஈடுபாடு உள்ளவர்களாக மாற்ற முடியும். இது காலத்தின் தேவையுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் மனதில்...

நான் - எனது என்ற எண்ணங்களுக்கு அப்பால் எமது பிரதேசம், எமது இனம், எமது மொழி, எமது சமயம் என்ற கோட்பாட்டினை நிலைநிறுத்தி அதன்படி எவனொருவன் வாழ்கின்றானோ அவன் காலத்தால் அழியாத ஒரு பேற்றினை அடைகின்றான். அவ்வகையில் வர்த்தகராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் கடமை புரிந்த முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் திரு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் போற்றத்தக்கவர்.



அதனடிப்படையில் மகேஸ்வரன் அவர்கள் தான் வாழ்ந்த காலங்களிலெல்லாம் தான் வகித்த கடமைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். வர்த்தகராக இருந்த பொழுது அதனை ஈடுசெய்யும் வகையிலும், பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் மக்களின் குறைபாடுகளை நீக்குவதிலும், இந்து கலாச்சார அமைச்சராக பதவி வகித்தபோது அவரது தூய்மையான செயற்பாட்டின்மூலம் குறிப்பாக யாழ் குடாநாட்டு ஆலயங்களும், ஆலயம் சார்ந்த சபைகளும் ஏதோ ஒரு வகையில் பயனடைந்தன என்பதில் மிகையில்லை. அவர் சைவத்துக்கும், சமூகத்துக்கும் ஆற்றிய சேவைகள் என்றும் அவரை நினைவு கூரத்தக்கதாக அமைந்து விட்டது.

ஆம்! அமரர் மகேஸ்வரன் இந்து கலாச்சார அமைச்சராக இருந்த காலத்தில் எமது நாடு போர்ச் சூழலினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் தத்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் எமது ஆலயங்கள் அனைத்தும் இருள் சூழ்ந்த நிலை. அந்நிலை கண்டு அவர் தமது சமூகத்தின் தேவைகளை ஈடுசெய்ததின் மூலம் எல்லா ஆலயங்களும் ஒளி வெள்ளத்தில் திளைத்தன. அவரின் தன்னலம் கருதாத செயற்பாட்டின்மூலம் பயன் அடைந்தவர்கள் எண்ணற்றவர்கள். அதனடிப்படையில் நாம் அவர் ஆற்றிய சேவையினைப் போற்றவேண்டியவர்களாக உள்ளோம். அமரர் மகேஸ்வரன் மறைந்து 16 ஆண்டுகள் நிறைவடைந்தாலும் அவர் ஆற்றிய சேவையை சந்நிதியான் ஆச்சிரமம் என்றும் நினைவுகூரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னை, சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை, கலாநிதி**

# தங்கம்மா அப்பாக்குட்டி (J.P) அவர்களின்

# 99ஆவது அறக்கொடை விழா



காலம்: 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்: காலை 08.30 மணி
இடம்: அன்னபூரணி மண்டபம்
(ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

பேரன்புடையீர்!

எதிர்வரும் 07.01.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 99ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்காதேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்பர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**
**ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**



# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
**சி. முஜீபன்**
(இணுவில்)
**செல்வி க. பாமதி**
(கொக்குவில்)
**திருமதி திருச்செல்வம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)
**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
**த. வயித்திலிங்கம்**
(திருநெல்வேலி)
**சி. சந்திரசேகரம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**சி. தில்லைமணி**
(வட்டுக்கோட்டை)
**வ. அப்புத்துரை**
(வல்வெட்டித்துறை)
**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
**ச. தமிழ்ச்செல்வம்**
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)
**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)
**S. சிவலிங்கராசா**
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**வ. துரைராசலிங்கம்**
(சுண்ணாகம் கிழக்கு)
**கணேசராஜா நிர்மலராஜன்**
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**T. நாகராஜா**
(கரந்தன், நீர்வேலி)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**பொ. சந்திரமோகன்**
(யாழ்ப்பாணம்)
**சி. நீலையினார்**
(இடைக்குறிச்சி, வரணி)
**இராஜேந்திரம் கஜீபன்**
(சண்டிலிப்பாய்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)
**தி. சிவபாதசுந்தரம்**
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
**ந. சிவராஜா**
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
**வனிதன் வெனுஜன்**
(கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. இரத்தினசபாபதி**
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
**சோம சூரியசிங்கம்**
(கோண்டாவில்)
**S.R. சரவணபவன்**
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
**க. வாமதேவன்**
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
**திருமதி ச. செல்வறஞ்சனா**
(சுண்ணாகம் கிழக்கு)
**S. மனோகரன்**
(மாதா கோயிலடி, கோப்பாய்)
**த. ஜெயவதனா**
(அல்வாய்)
**நடராஜா சறோஜா**
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)
**த. சுகந்தன்**
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
**சி. சோமகுலசேகரம்**
(கரவெட்டி)
**சி. சரவணப்பெருமாள்**
(மாணிக்கவளவு, கரணவாய்)
**சிவலிங்கம் தேவமலர்**
(அச்சுவேலி)
**S. கணேசமூர்த்தி**
(கெருடாவில், தொண்டைமானாறு)
**S. சத்தியமூர்த்தி**
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
**சு. சிவலிங்கம்**
(குகன்குடிசை, பொலிகண்டி)
**திருமதி. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**ம. கருணாநிதி**
(நல்லூர்)
**அன்புமலர் சிதம்பரநாதன்**
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. முருகானந்தன்**
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
**செ. அரியானந்தம்**
(காங்கேசந்துறை)
**செ. இராசதுரை**
(வட்டுக்கோட்டை)
**இ. பாஸ்கரன்**
(சுதுமலை வடக்கு)
**N. குணரெட்ணம்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**V. சிவனேசன்**
(கமலை, மானிப்பாய் வீதி)
**சே. புலேந்திரன்**
(நீர்வேலி)
**இ. நடராசா**
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
**பொ. செல்வகிருஷ்ணன்**
(புலோலி தெற்கு, புலோலி)
**சி. சிவசுப்பிரமணியம்**
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
**அ. பரமநாதன்**
(தெல்லிப்பழை)
**திருமதி கமலா குணரெத்தினம்**
(வட்டுக்கோட்டை)
**திருமதி சத்தியவாணி நந்தகுமார்**
(நவாலி, மானிப்பாய்)
**கந்தையா செல்வக்குமார்**
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
**திருமதி அன்னலெட்சுமி**
(சங்கானை)
**வி. சிற்றம்பலம்**
(மாதகல்)
**சோமசுந்தரம் செல்வசுந்தரம்**
(மீசாலை கிழக்கு)
**ஏகாம்பரம் சந்திரா**
(பருத்தித்துறை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தனையது உயர்வு

**– திரு கு. சிவபாலராஜா** அவர்கள் –

"செயல்" என்பதை "வினை" என்றும் குறிப்பிடுவர். நாம் ஒரு செயலைச் செய்யும்போது நமது மனமானது மெலிவின்றி செயல் செய்வதில் கிளர்ச்சியுடையதாக இருத்தல் வேண்டும். அந்நிலையே ஊக்கம் எனப்படும். ஒரு செயலில் ஊக்கம் ஏற்படுவதற்கு அச் செயல் பற்றியதோர் முன்னறிவு, செயலால் வரும் பின் பயன்கள், செயலின் தேவைகள் முதலியன வற்றைப்பற்றி சிறிதாவது அறிந்திருத்தல் ஊக்கம் ஏற்படுவதற்குரிய அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மனிதன் தன் வாழ்வில் கட்டாயம் உடைமைப் பொருட்களாக வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய பத்து விடயங்களை வள்ளுவப் பெருந்தகை விளக்கியுள்ளார். அவையாவன: அன்புடைமை, அறிவுடைமை, ஊக்கம் உடைமை, ஆள்வினை உடைமை, பண்புடைமை, நாணுடைமை, அடக்கம் உடைமை, ஒழுக்கம் உடைமை, பொறையுடைமை, அருளுடைமை என்பன. இவற்றுள் மிக முக்கியமானது ஊக்கமுடைமை ஆகும். ஏனெனில் ஊக்கம் இல்லாது விட்டால் ஏனைய உடைமைகளாகிய மேற்சொன்ன உடைமைகள் அனைத்தும் சிதைந்துவிடலாம். எனவே ஊக்கத்தின் கண்ணே எமது உயர்வுகள் தங்கியுள்ளன என்பதை உணர்தல் வேண்டும்.

"ஊக்கமது கைவிடேல்"

-ஔவையார்.

மனக்கிளர்ச்சியே ஊக்கத்தின் அடிப்படையாய் அமைந்துள்ளது. ஏனைய காரணங்கள் பிற நிலைகளில் வைத்து எண்ணப்படும். வள்ளுவர் "ஊக்கம்" என்பதை "உள்ளம்" என்னும் பதத்தினால் குறித்துள்ளமை காணலாம். ஊக்கம் என்பது நம் உள்ளத்தில் உண்டாகும் "பண்பு" ஆகும். நீர்நிலைகளில் காணும் தாமரை, அல்லி, ஆம்பல் போன்ற மலர் இனங்களின் தண்டுப்பகுதி அவற்றின் நீரின் உயர வேறுபாட்டைக் கொண்டு நீளமாகவும் குட்டையாகவும் வளர்வதைக் காணலாம். எனவே, நீர் உயர அம் மலரின் தண்டும் உயர் வடையும். அதுபோல் மாந்தரின் ஊக்கத்தின் அளவினைப் பொறுத்தே அவர்களது வாழ்வும் உயர்வடையும் என்றுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. இவ்வுயர்வும் படிப்படியாக முன்னேறிச் செல்லும். இதனால் ஊக்கமுடையாரின் உயர்ச்சிபற்றிக் கூறப்பட்டது.

வெள்ளத் தனைய மலர் நீட்டம், மாந்தர் தம்
உள்ளத்து அனைய உயர்வு

-குறள்.

நாம் "உடையவர்" என ஒருவரைக் கூறும் மரபு ஊக்கம் உடையோரை மாத்திரம் குறிக்குமே தவிர, ஏனைய பொருளுடையோரை உடையவர் அல்லது உடையார் எனக் கருதப் படுவதில்லை. அவர் ஊக்கம் இல்லாதிருப்பின் அவர் கையிலுள்ள ஏனைய பொருட்களையும் பேணிக்காக்கும் திறனற்றவராகி அதையும் இழப்பர். எய்திய பொருளிலும் ஊக்கம் சிறந்தது.

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைய ரெனப்படுவது ஊக்கம் அ∴தில்லார்
உடையது உடையரோ மற்று.

-குறள்.

நிலையான உடைமை என்றால் அது ஊக்கம் உடைமையையே குறிக்கும். மற்றைய உடைமைகள் நிலையற்றவையாகும். பொருளுடைமை நில்லாது நீங்கிவிடும். அது நிலையற்ற உடைமையாகும். எனவே பொருளிலும் சிறந்தது ஊக்கம்.

உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

-குறள்.

ஊக்கமுடைய மாந்தர்களே சமூகத்தில் "உடையார்" என்னும் சமூகநலத் தகுதியால் குறிக்கப்படுவதற்குரிய தகுதியான பிரிவினர் எனக் கருதுவோருமுளர். ஏனையோர் ஊக்க மின்மை காரணமாக அத் தகுதியை இழந்தவர்கள் எனவும் கருதலாம். எனவே, உடையார் எனப்படுவோர் ஓர் இனத்தின் பாகுபாட்டினைக் கூற எடுத்துக்கொண்டுள்ள பதம் அல்ல. அவர்களும் ஊக்கமின்றேல் அத்தகுதியையும் இழப்பர்.

நாம் கருதுவது எல்லாம் எமது உயர்ச்சி பற்றியே கருதுதல் வேண்டும். அவ்வுயர்ச்சி யானது விதிவசத்தால் கைகூடிவராமல் போனாலும் பரவாயில்லை. அக்கருத்தினை நினைப் பதை நிறுத்தக்கூடாது. அதையே நினைத்திருத்தல் வேண்டும். ஏனெனில் அக்கருத்தினைத் தள்ளாது விடில் அதுவே பெரும்பாலும் நன்மை தரக்கூடியதாய், நல்லோரால் பழிக்கப்படாது விடில் ஏற்கப்பட்டும்விடும் சந்தர்ப்பம் உண்டு. தள்ளாதுவிடில் அக் கருத்து பெரும்பான்மை யோரின் ஆமோதிப்போடு படிப்படியாக ஏற்கப்பட்ட கருத்தாக மாறிவிடும். இது ஊக்கத்தைக் கைவிடுதல் கூடாது என்பதையும் அதன் வழிநிற்போரின் உயர்ச்சியும் விளக்கப்பட்டுள்ளது.

உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்று அது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

-குறள்.

தவிர்ப்பினும் தவறாது தாம் உள்ளத்தில் கொண்டதை நிறைவேற்றி முடிக்கும் பண்பு ஊக்கமுடையோரிடம் காணப்படும் இயல்பாகும். அதற்கு உவமையாகக் கூறப்பட்டது யாதெனின்; தன் உடல் முழுவதும் அம்புகளால் தாக்கப்பட்ட ஓர் யானையானது தன் பெருமையில் குறைவுபடாமல் இருக்கும் என்பது. இப்பாடலில் கூறப்பட்டது யாதெனின் ஊக்கம் உடையாரது உயர்ச்சியேயாகும்.

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

-குறள்.

அடுத்து ஊக்கம் இல்லாதவரது இழிவு பற்றியும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஊக்கமில்லாதோர் தாம் இவ்வுலகத்தில் வண்மையுடையோம் அதாவது பெருமையுடையோம் என்று எண்ணியடையும் தம்மைத் தாம் மதித்தல் எனும் சிறப்புக்கு ஆளாகமாட்டார்கள். ஊக்கம் இல்லாத காரணத்தால் முயற்சி, பொருள், கொடை, செருக்கு இவைகள் இல்லாமற்

*முயன்று செயல்களைச் செய்பவனே வாழ்க்கையில் வெற்றிபெறுவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும். அதனால் அவர்கள் செருக்கு அடையமாட்டார்கள் என பாடலில் கூறப்பட்டுள்ளது. சோம்பித் திரிவோரை உலகம் போற்றாது என்பது உறுதி.

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

-குறள்.

யானை உருவத்தில் பெரிய மிருகம். அதற்குக் கூரிய கொம்புகள் உண்டு. வலிமை மிக்க மிருகம் அது. அவ்வாறு இருந்தும் யானையை புலி எதிர்த்துத் தாக்க முற்படின் அந்த யானையும் அஞ்சுமாம் என உவமித்துக் கூறியுள்ளார் புலவர். பெரிய உடம்பை உடையதால் யானை வலிமை மிக்கது என்று கூறியுள்ளார். புலியைவிட யானை உடல் வலிமை மிக்கது. ஆனால் யானை ஊக்கம் இன்மையால் பலமிருந்தும் புலிக்கு அஞ்சும். காரணம்; ஊக்கம் இன்மையேயாகும். பெரிய மிருகமாயினும், பலமிக்கதாயினும் ஊக்கம் இருந்தால் மட்டுமே புலியை வெல்ல முடியும் என விளக்கியுள்ளார். எனவே, எமது வலிமைகளை ஆதாரமாக நினைத்து ஊக்கத்தைக் கைவிடுதல் கூடாது. ஊக்கத்தைக் கைவிட்டால் தோல்வியே கிடைக்கும்.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

-குறள்.

ஒருவர்க்குத் திண்ணிய அறிவு ஊக்கமிகுதி. அந்த ஊக்கமிகுதி இல்லாதார் மனிதரல்லர். அவர்கள் மரம்போல்வர். அவர்கள் உருவத்தில் மனிதர்கள்போலக் காணப்படுவர். ஆனால் அவர்கள் மரங்களேயாவர். திண்ணிய அறிவு என இங்கே சொல்லப்பட்டது யாதெனில்; ஊக்கத்தோடு கூடிய வலிமையாகும். அது இல்லாத மனிதர்கள் மரங்கள் என இழிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இப் பாடலும் மேலுள்ள இரண்டு பாடல்களும் ஊக்கம் இல்லாதோரின் இழிவுபற்றிக் கூறப்பட்டதேயாகும்.

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம்மக்க ளாதலே வேறு.

-குறள்.

நாம் நமது கைப்பொருளை இழந்துவிட்டோமே என்று கவலைப்படத் தேவையில்லை; ஏனெனில் நாம் ஊக்கத்தைக் கைப்பொருளாக உடையவரானால் தொலைந்த பொருள்பற்றிய கவலைதான் ஏது? ஆதலால் ஊக்கமுடைமை என்பது நிலையான பொருள். அதனை இழத்தல் கூடாது. நிலையற்ற ஏனைப் பொருட்களை இழக்கவும் முடியும். அதனால் நமக்குத் துன்பம் இல்லை. எய்திய பொருளிலும் ஊக்கமே சிறந்தது.

ஆக்கம் இழந்தோமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

-குறள்.

அசைவற்ற ஊக்கம் உடையார்களிடம் பொருட்கள் தாமே வழி விலகிக்கொண்டு சென்றடையும் சிறப்புடையது. இங்கே அசைவின்மை எனப்பட்டது துன்பம் முதலியவற்றால் தளர்வடையாமை என்பதைக் குறித்துள்ளது. பொருள் தானே சென்று சேரவேண்டிய

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று ஒன்றுமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தைச் சேர்ந்துவிடும் என்பது. அவையாவன; நாம் எய்தி நின்ற பொருளிலும் அதற்குக் காரணமான ஊக்கம் சிறந்தது என்பது விளக்கப்பட்டுள்ளது.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. -குறள்.

---

## ஆலயத் திருத்தொண்டு

இந்தப் பிரபஞ்சமானது எப்போது தோற்றம் பெற்றதோ அப்போதிருந்தே ஆலயத் திருத்தொண்டும் தோற்றம் பெற்றதெனலாம். சைவசமயத்தவரின் முழுமுதற் கடவுளாகப் போற்றப்படுபவர் சிவபெருமான் என்பதோடு மட்டுமல்லாது ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெரும் சோதியாகவே திகழுகின்றார். ஆலயத் தொண்டையே தமது ஆத்ம தொண்டாகக்கொண்டு எத்தனையோ அருளாளர்கள் வாழ்ந்து காட்டியமை நாம் பலரும் அறிந்த விடயமே.

இன்றைய நவீனமயமான உலகிலே மக்கள் ஆன்ம ஈடேற்றத்தை மறந்து வெவ்வேறான சிந்தனைகளோடு ஆலயத்திற்கு அருகாமையில் கூடச் செல்லும் பாதையைக்கூட விலக்கி வருகிறார்கள் எனலாம். ஆலயத்துக்குச் செல்வதென்றால் பெரியதொரு வேலையாகப் பலர் கருதுகின்றார்கள். புகழ், பணம், பதவி என்று பகட்டான வாழ்க்கையை நோக்கி விரைந்து செல்கிறார்கள். தாம் பக்தி உள்ளவர் என்று மற்றவர்களுக்குக் காட்டுவதற்காகக் கோவிற் கட்டடநிதி, கும்பாபிசேக பூசையில் தமக்கென்று ஓரிடம், தேர்த்திருவிழா நேரங்களில் போலித்தனமான செயற்பாடுகள் போன்றவற்றைச் செய்து தாம் இறைவன்மீது பக்தியுள்ளவர் என்று வேடம் போடுகிறார்கள். இவையெல்லாம் மற்றவர்களுக்கு தாம் பெரியவர் எனும் நினைப்பை உண்டாக்குவதே தவிர ஒருவித பயனையும் தராது.

இன்று பெரும்பாலான ஆலயங்களில் பூசை நேரங்களில் மணியடிக்க ஒருவரும் இருக்கமாட்டார்கள். பூசைக்குத் தேவையான பூக்கள் பறித்துக்கொடுக்க யாரும் இருக்கமாட்டார்கள். ஏன் இன்னும் முக்கியமாக ஆலயங்களில் தூசும், புழுதியும் நிறைந்து காணப்படுகின்றன. இவை மட்டுமல்லாது ஆலயப் பாவனைக்கென்று இருக்கும் கிணறுகள்கூட பாழடைந்தும் இடிந்தும் கிடப்பதைக் காணலாம். இவற்றையெல்லாம் சீர்செய்ய நாம் முயலவேண்டும்.

மானுட வாழ்வை மேன்மைப்படுத்த எத்தனையோ புதிய நுட்பங்கள் பிறந்தாலும்கூட ஆலயத் தொண்டைப்போலச் சிறந்ததொரு சேவையை யாராலும் புதிதாக உருவாக்கமுடியாது. காரணம் இத் தொண்டானது ஊழிக்காலம்வரை இருக்கக்கூடியதாகும். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மாயையான உலகிலே எம்மால் முடியுமானவரை ஆலயங்களுக்கு செல்வோம். செல்லும்போது வெறும் கைகளோடு செல்லாது எமது வசதிக்கேற்றவாறு வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர், எண்ணெய் போன்றவற்றைக் கொண்டு செல்லலாம். இவற்றைக் கொண்டு செல்ல வசதியற்றோர் இயற்கை இலவசமாகத் தரும் பூக்களைப் பறித்துச் செல்லலாம்.

ஆலயங்களில் தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்த்து அந்த நேரங்களிலே கூட்டலாம், துப்புரவு செய்யலாம். பூசைக்குரிய பொருட்களை துலக்கிக்கொடுத்து ஆலயத்துக்குரிய பல பணிகளைச் செய்யலாம்.

எம்மைப் படைத்து எமக்காகச் சகலவிதமான இயற்கைப் பொருட்களையும் படைத்த இறைவன் எம்மிடம் எதையுமே எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் பகுத்தறிவுடைய நாம் விலங்குகளைப்போல் வாழாது ஆலயத்தொண்டை ஆத்ம தொண்டாகக்கொண்டு இறைவனுக்கு நன்றி செலுத்துவோமாக.

*-கௌரி-*

*மனிதன் தோல்வியின்மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஆனந்த சாகரம்

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## ஆனந்த சாகரம் (எல்லையற்ற ஆனந்தக்கடல்)

மானிடப்பிறவியின் பயனும் பேறும் தனக்குவமை இல்லாதான் தாள் சேர்தல் என்பது வான்புகழ் வள்ளுவன் கூற்று. மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்க உழைத்த உத்தம துறவிகள் பல்லாயிரம்; சமயகுரவர்கள், நாயன்மார்கள் பிறவிப் பயனை அடைந்த மானிடப் பிறவிகள். அல்லற்பட்டு, அவலமுறும் ஆத்மாக்கள் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் என்றும் இறைவன்தாள் நினைக்க வேண்டும். அன்பேசிவம். அறத்தின்பால் ஒழுகுவது மறுமைக்கும் வழிசமைக்கும். நாம் இறைவனை மறந்த நேரம் இறந்த நேரத்திற்குச் சமம்.

அன்னை மனோன்மணி கருணைக்கடல். அவளை நினைத்து அவளது கருணை வெள்ளத்தில், ஆனந்தக்கடலில் மூழ்கித் திளைக்கும் வாழ்வியலைக் கொள்ளவேண்டும். அதுவே அர்த்தமுள்ள வாழ்வாகும். அதுவே தனக்குவமை இல்லாதான் தாள் சேரும் ஒரே வழியாகும். புண்ணியம் பண்ணினவர்களுடைய கதைகளைக் கேட்பது புண்ணியம். மனதிலுள்ள அழுக்கெல்லாம் போகும்வரை திரும்பத் திரும்ப புண்ணிய கதைகளைப் படிக்க வேண்டும். பகவானுடைய கல்யாண குணங்கள் மன அமைதியை, சாந்தியை, ஆனந்தத்தை தரும். மனம் பகவானையே நினைக்கவேண்டும். பகவான் நாமத்தைச் சொல்லும் போது கண்ணிலே ஊற்று எடுக்கவேண்டும். "ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" மாணிக்கவாசகர் அழுது அழுது அரனடி சேர்ந்தவர். நாம் மனிதப் பிறவி எடுத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறவே. பிறவி எடுத்தவர்கள் உய்வதற்காக ஏற்பட்ட மகா மந்திரம் காயத்ரீ.

ஓம் பூர் புவ ஸுவ:
தத் சவி துர் வரேண்யம்
பர்கோ தேவ ஸ்ய தீமஹி
தியோ யோந ப்ரசோதயாத்:

வேதாசாரமான இந்த மகா மந்திரம்.

தினம்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு காயத்ரி ஜபம் செய்யவேண்டும். காலை, மதியம், மாலை மூன்று வேளையும் ஜபம் செய்துவர அஞ்ஞான இருள் அகலும், ஆன்மீக நாட்டமும், தெய்வீக ஒளியும் ஏற்படும். காயத்ரீ மந்திர ஜபத்தினால் பட்டமரம்கூட தழைக்கும், ஏழையும் செல்வந்தனாவான். வாழ்வில் நிம்மதியும், மனச்சாந்தியும், எதிரிகள் நாசமடைவார்கள், பாவங்கள் நீங்கிப் பிறவித்துயர் நீங்கும். காயத்ரி என்பது ஒரு சந்தஸ். காயத்ரி சந்தஸில் அமைந்த மந்திரங்கள் மூன்று காலமும் பண்ணக்கூடிய ஹோமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதப்படுகின்றன. பகவானுக்கே காயத்ரி சந்தஸ் என்றால் அவ்வளவு இஷ்டம். காயத்ரியை நாம் தியானம் பண்ணினால் பரமாத்மா பரமதிருப்தி அடைகிறார். ஒவ்வொரு தேவதைக்கும் ஒவ்வொரு காயத்ரி அமைந்திருக்கிறது.

விஷ்ணு காயத்ரியைச் சொன்னால், பகவான் வந்து மடியிலே உட்கார்ந்து விடுவார்.

நாராயண வித்மஹே வாஸு தேவாயதீமஹி
தன்னோ விஷ்ணு ப்ரசோதயாத்.

சந்தியாவந்தனம் செய்யும்போது காயத்ரி தேவியைக் காலையிலும், சாவித்திரியை மத்தியானத்திலும், சரஸ்வதியை சாயங்காலத்திலும் வணங்கவேண்டுமென்பது முறை.

அன்னையே! காயத்ரி மாதாவே! என் அறியாமையை அகற்றி ஞானத்தைத் தரவேண்டும். என் அறிவினைத் தூண்டிப் பிரகாசிக்க செய்யவேண்டும். ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! எனப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

அம்பிகையை வழிபடுபவர்க்கு மனத்தளர்ச்சி ஏற்படுவதில்லை என்பதனை “தளர்வறியா மனம்” என்கிறார் அபிராமிப்பட்டர். மனம் தான் எல்லாவித துன்பங்களுக்கும் காரணம். மனதை நாம் கட்டுக்குள் வைத்துக்கொள்ள அன்னையின் அருள் வேண்டும். மாயா உலகிலே ஓயாத துயராலே மாளாமலே எனக்கு வழிகாட்ட வேண்டும் தாயே!

உலக ஆசைகளில் வசப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்பாசத்தில் அகப்பட்டு அல்லல்படாது; பட்டரிடம் வலிய வந்து வாசக்கமலம் தலையில் சூட்டி ஆட்கொண்டதுபோல அடியேனையும் கூற்றுவனிடமிருந்து ஆட்கொள்ளவேண்டும் தாயே!

அன்னையே! நின் நறுமணம் வீசும் தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்கி முத்திக்கு வழியமைக்கும் தவநெறியும், சிவலோகத்தை அடைந்து முத்தியின்பமும் கிடைக்க திருவருள் புரிய வேண்டும்.

உனையன்றிக் காசினியில் கவலைதீர்ப்பார் யாருண்டு? மாசிலாமகிமை படைத்த மனோண்மணித் தாயே! நீயே கதி! என்றுன்முன் வந்து நின்றேன். பார்த்தும் பாராததுபோல் இருக்கலாமா? அம்மா என்று சம்பந்தர் அழைத்ததும் ஓடிவந்து பாலமுதம் கொடுத்து அருள்புரிந்த ஞானப்பூங்கோதையே! அம்மா! அம்மா! என்று அடியேன் கதறுவது திருச்செவியில் விழவில்லையோ? காலனைக் காலால் உதைத்தோன் தேவியே! புகலொன்றில்லா ஏழையைக் கைவிடுதல் நீதியோ? நோயுற்று நொந்து நாதியற்ற நாயேனை அரவணைத்து ஆதரிப்பாயம்மா! தொழுகின்ற அன்பர்களின் துயர்நீக்கிப் பேரருள் புரிவதில் பெயர்பெற்ற அன்னை நீ! பயந்த தனிவழியில் துணை செய்யவேண்டுமம்மா!

மனதிலே தித்திக்கும் ஆனந்தரூபமயிலே! மாதவன் சோதரியே! ஆவலாய் தூக்குவாய் என ஆசையுடன் ஓடிவந்து நின் திருவடிகள் பற்றினேன். கணபதி முதற்பிள்ளை. கந்தன் உன் செல்லப்பிள்ளை. அறிவிலி நானும் உன் பிள்ளையன்றோ! விரட்டாது எனைத் தூக்கி அன்புடன் உன் முந்தானையால் என் விழிநீர் துடைத்து, விசும்பல் தடுத்து, உன் மடிமீதிருத்தி என்றும் உனைப் பிரியாது இருந்து ஆனந்தமுற அருள்வாயம்மா! எத்தனை குறைகள், எத்தனை பிழைகள், எத்தனை அடியேன் எத்தனை செய்யினும் பெற்றவள் நீ

*வாழ்வில் முன்னேறுவதற்கு தன்னம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தருள வேண்டுமம்மா! தாய் முகமன்றி யார் முகம் பார்ப்பேன்? பொல்லா வினை தீர்க்கும் பூங்கிளியே! எல்லையில்லா அருட்கடலே! புன்னகை புரியும் உன்முகம் காண என் மனம் ஏங்குதம்மா! கருணைத் தாயிருக்க சேய் நான் வருந்தலாமா? அகிலாண்டகோடியீன்ற அன்னையே நீ இருக்க எனக்கென்ன மனக்கவலை?

எனக்கென்ன மனக்கவலை என் தாய்க்கன்றோ
தினம் தினம் என் கவலை
மனத்திலும் செயலிலும் வாக்கிலும் நோக்கிலும்
அனைத்துமாய் இருந்தென்னை ஆண்டவள் இருக்கையில்
எனக் கென்ன மனக்கவலை என்தாய்க்கன்றோ
தினம் தினம் என் கவலை அம்மா அம்மா அம்மா.

அல்லலை ஓட்டுவாள் வல்லமை நாட்டுவாள்
அம்புலிதனைக் காட்டி அமுதினை ஊட்டுவாள்
தொல்புவி எனக்கொரு தொட்டிலாய் ஆட்டுவாள்
சுத்த முத்த சமத்துவச் சுடர் என்னுள் ஏற்றுவாள்.
(எனக்கென்ன.... அம்மா, அம்மா, அம்மா)

தாயே! மனோன்மணியே! காப்பது உன்பாரமம்மா! உன் பூப்பாதம் அன்றி எனக்கு வேறு கதியில்லையம்மா! பரிமளப்பூங்கொடியே! ஆனந்தசாகரமே! உன் ஆனந்தத் தரிசனம் தாருமம்மா! நலந்நீங்கிலும் உன் நாமம் என் நாவில் மறவாது துதிசெய்ய அருள்புரிய வேண்டும்!

அன்னையின் அன்பு மழையிலே, எல்லையற்ற ஆனந்தக்கடலிலே நீந்திக் களித்து பேரானந்தம் பெற அன்னையின் அருள் வேண்டும். கற்பகவல்லி, ஆனந்தவல்லி, அழகின்கடல், அன்னையின் தரிசனம் பெற நாம் அல்லும் பகலும் அநவரதமும் நினைந்து நினைந்து உருகி காதலாகி கண்ணீர் மல்கி ஏங்கி அழுதிட வேண்டும். அழுது அழுது அரனடி சேர்ந்தவர் மணிவாசகர். நீ தாய். நாங்கள் பிள்ளைகள். எங்கள் உறவு ஒழிக்க ஒழியாது. அறியாத வெகுளிப் பிள்ளைகள் நாம் செய்த பிழைகளுக்கு தாயே கோபம் கொள்ளாது உன் ஆனந்தவெள்ளக் கடலில் நீந்திக் களிக்க அருள்புரிவாயாக. சரணம் ஈஸ்வரி சரணம் ஈஸ்வரி சரணம் ஈஸ்வரி.

நம்பினார் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு. அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்.

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி!

தரக்குறைவான உலோகங்கள் அதிக ஒலியை எழுப்புகின்றன. தரத்தில் கூடிய பொன் ஒலி எழுப்புவதில்லை. அதுபோல் உண்மையான பக்தர்கள் எப்பொழுதும் நிசப்தமாக இருப்பார்கள்.

*விடாமுயற்சி மட்டுமே நம் வாழ்க்கையை மாற்றியமைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் மானுடனை வினை நீக்க பூமியில் படைக்கின்றான். மானுடன் இந்த உண்மையை உணர்ந்து தான தருமஞ் செய்து, இறைவனை வழிபட்டு வினை நீக்க முயலவேண்டும். பிறப்பு, இறப்பு இடைநடுவே வாழ்க்கைச் சக்கரம் ஓடுகின்றது. பிறப்பு இறப்பு எப்படி என்பதை தெய்வப்புலவர் வள்ளுவன் "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" என அழகுறப் பாடியுள்ளார். முக்காலத்தையும் உணர்ந்த முனிவன் வள்ளுவன்; மனிதன் எப்படி வாழவேண்டுமென இல்லறவியலில் எடுத்து இயம்பியுள்ளான். நெறி தவறாது, உண்மையை உரைக்க வேண்டும். பிறருக்கு உதவி செய்யவேண்டும். இந்த வழிகளைக் கடைப்பிடித்து நடக்கும்போது இறைவனை வழிபடவேண்டுமென்ற எண்ணம் தோன்றும். இறை அருளால் வினை நீக்கப்படுவான்.

அரிய பிறவியை எடுத்த மனிதன் பூமியில் பிறந்து இறக்கும் வரை நற்காரியங்களைக் கடைப்பிடிக்க வினைகள் ஒழிந்து வீடுபேறு அடைவானென்று இறையருள் பெற்றவர்கள் கூறுகின்றார்கள். வினைகள் நீங்குவதற்கு இல்வாழ்வு பேருதவி புரிகின்றது. இல்லிலிருந்து தான தருமம் செய்தல், பிதிர்க்கடன் செய்தல், உறவுகளுக்கு உதவி செய்தல், கோவில் அன்னசாலை அமைத்தல், நோயுற்றவர்களுக்கு உடல் உதவி, பண உதவி செய்தல், பாடசாலை கட்டி வறியவர்களை கற்க வைத்தல், சமய ஒழுக்கங்களையும் கடைப்பிடிக்க வழிசெய்தல் போன்ற நற்காரியங்களை நெறிப்படுத்தல் வேண்டும்.

கல்வி கற்காதவன் அரை மனிதன் என்று அறிஞர் கூறுகின்றனர். இந்த உண்மையை உணர்ந்த புரட்சிக் கவிஞர் பாரதியார் "அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டல் அன்னவையாவிலும் கோடி புண்ணியம் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்" என்று மக்களுக்கு உணர வைத்துள்ளார். கல்வி கல்லாதவன் மூடன் என்று மக்கள் கூறுகின்றனர். இன்னும் விலங்குகளுக்கு ஒப்பானவன் என்று மக்கள் கூறுவதை நாம் எல்லோரும் அறிவோம். பிறப்பு இறப்புக்கிடையில் இல்வாழ்வு ஓடுகின்றது. மரணம் எப்போது நிகழும் என்று யாருக்கும் தெரியாது. இதை ஆறிலும் சா நூறிலும் சா என்று சொல்வதை நாம் கேட்கின்றோம். எனவே வினைகளை ஒழிக்க முயலவேண்டும்.

பூமியில் பிறந்த மனிதன் விஞ்ஞானிகளாகவும், பொறியியலாளர்களாகவும், சட்ட மேதைகளாகவும், வைத்தியத்துறையில் மேதைகளாகவும் விளங்குகின்றனர். விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பால் மனிதர்கள் உலக விடயங்களை நொடிப்பொழுதில் அறிகிறார்கள். தொலைக் கருவிகள்மூலம் புதினங்களை அறிவதுடன், விஞ்ஞான வாழ்க்கையில் ஒழுகத்தொடங்கி விட்டார்கள். இதனால் கடவுள் நம்பிக்கையை இழந்து விஞ்ஞான வழி நடக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானத்திலும் மெய்ஞானம் மேன்மையுடைத்தென்பதை உணர மனம் மறுக்கின்றது. அருணகிரிநாதர் மூலன் கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததை அறிந்தும், நவீன உலகில் விஞ்ஞானத்தை முழுக்க முழுக்க நம்புகிறார்கள். வைத்தியம் செய்தும் நோயை மாறாதவனை வைத்தியன் கடவுளை வேண்டுங்கள் என்று கூறுவதை அறிவோம்.

உலகை இயக்க ஒரு சக்தி இருக்கின்றதென்பது மக்கள் அறிந்தும் மலப்பீடிப்பால் மறைக்கப்படுகின்றது. மலப்பீடிப்பை நீக்க மக்கள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சென்று வழிபட்டு வாருங்கள். அவன் உங்கள் வரவை எதிர்பார்த்து வேலும் மயிலுடன் நடனமாடிக்கொண்டிருக்கின்றான். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவான் கண்டாய். மெய்நெறி கண்டாய் விரதமெல்லாம் மாண்ட மனத்தார், மனத்தான் கண்டாய், மறைக்காட்டுறை மணாளன் தானே? என்று நாயனார் அருளியதைப் போற்றுவோம்.

உயிரினங்கள் இறைவனால் படைக்கப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. படைக்கப்பட்ட உயிரினங்களுக்கு உயிர் இருக்கின்றன என்று அறிகின்றோம். உயிர்கள் உடம்பை விட்டு நீங்கினால் இறப்பு ஏற்படுகின்றது. கண்ணுக்குத் தெரியாத உயிரை எமது உடம்பில் இறைவன் விட்டுள்ளார். திருநாவுக்கரசு நாயனார் கைலாய புராணத்தில்

மருவார் புரம் மூன்றும் எய்தாய் போற்றி
மருவி என் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒழித்தாய் போற்றி"

என்னும் பாடல்மூலம் உயிரைத் தந்து ஒழித்தாய் என்பதினால் நாம் அறியாதவாறு உடலில் ஒழித்து வைத்திருக்கின்றாய் என்று பொருள்படக் கூறுகின்றார். அப்படியான உயிரை அருணகிரிநாதர், திருமூலநாயனார் எப்படி எடுத்து வேறு உடல்களில் புகுத்தினார்கள் என்பது மிகவும் அதிசயமானது. அருணகிரிநாதர் இறந்து கிடந்த கிளியின் உடலில் புகுத்தி பறந்து சென்று பாரிசாதமலரைப் பறித்துக்கொண்டு வந்தார் என்று கூறுவதை அறிவோம். அதுபோல் திருமூலனும் இறந்துகிடந்த உடலினுள் தனது உயிரைப் புகுத்தி, மாடுகளை ஓட்டிச்சென்று ஒவ்வொருவர் வீட்டிலும் கொடுத்தார் என்று கூறியதை வரலாறு கூறுகின்றது. இவையெல்லாம் இறையருள் பெற்றவர்களால் செய்யப்பட்டன. எனவே தெய்வத்தால் ஆகாததொன்றுமில்லை. ஆறுமுகநாவலர் சிவனை என்றும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என்று கூறியுள்ளார். எனவே உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்ற குறளை கூறியிருப்பது மிகவும் பொருத்தமாகும்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு பிரதிச் செயல் ஏற்படும். ஆனால் கடவுளின் திருவருள் துணைகொண்டு தான் செய்த வினைகளின் பயனிடமிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள இயலும். மார்க்கண்டேயனுக்குக் கிடைத்ததுபோல ஒருவன் இறைவன் திருவருளைப் பெற்றால், அவன் தனது தலைவிதியையே மாற்றி அமைத்துக்கொள்ள முடியும்.

*உழைப்புத்தான் எல்லா செல்வங்களுக்கும் மதிப்புகளுக்கும் மூலம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

(தொடர்ச்சி...

## அத்தியாயம் – 11

## தியான யோகம்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 01) தயார் நிலை

கீதையின் ஆறாவது அத்தியாயத்தின் விடயம் தியான யோகம் ஆகும். தியானத்திற்கு மன ஓட்டங்கள் இல்லாத வசதியான ஓர் இடம் அத்தியாவசியம் என்பதை அவதானித்து உள்ளோம். தியானத்திற்காக நாம் தெரிவு செய்யும் நேரமும் அவ்வாறே தியான இலக்கில் இருந்து மனதை வேறு எந்த அலுவல்களிலும் ஈடுபடுத்தாத பின்னணியை உடையதாக இருக்கவேண்டும். தியானத்திற்குப் பொருத்தமான இடம், நேரம் என்ற இரண்டும் முக்கிய முன்நிபந்தனைகள் ஆகும். ஆனால் இடம், நேரம் என்ற அவ்விரண்டைக் காட்டிலும் தியானத் திற்கேற்ப மனதின் தயார் நிலை மிக முக்கியமானது எனலாம். தியானத்திற்காக அமருவதற்கு மனம் மிக ஆர்வமுள்ளதாக இருக்கவேண்டும். அந்த வேளையில் மனம் எதனாலும் வற்புறுத்தல் இல்லாததாகவும் இருக்கவேண்டும். தியானத்திற்காக ஒதுக்கப்பெற்ற நேரம் தினமும் வருகிறது என்ற காரணத்தினால் மட்டும் அதற்காக நாம் அமருவதில்லை. பசி இல்லாதபோதும் மதியபோசன நேரம் வருவதால் மட்டும் உணவுக்குச் செல்வதை அத்தியானம் ஒத்ததாகும். எனவே அங்கு நேரம் மட்டுமன்றித் தியானத்திற்கான தேவையே முக்கியமாகும். மனம் தியானத்திற்கான தேவையை உணராவிடின் இடத்தையும், நேரத்தையும் குறித்தபடி அமைத்துக்கொள்வதால் எதுவித பயனும் இல்லை. மனம் தயார்நிலையில் இல்லாத காரணத்தினால் திருப்தியான எதுவித பலனையும் பெறுவதில் பெரும்பாலான மக்கள் ஒரு சிரமத்தையே உணர்கிறார்கள்.

### 02) இறுதி மருந்து

மனதை எவ்வாறு தயார்ப்படுத்த வேண்டும்? இதிலுள்ள ஒரு பிரச்சினை என்னவெனில் ஒவ்வொருவரும் தனது நோக்கில் தனது மனதை தயாராக்கிக் கொள்ளவேண்டும் என்பதாகும். யோகப் பயிற்சியை நாம் மேற்கொள்வதற்கான தேவையை ஏன் உணருகின்றோம்? அந்தத் தேவையை உணராவிடில் நாம் யோகத்தில் தஞ்சம்புகவேண்டிய அவசியம் இல்லை. எனினும் வாழ்க்கைப் பிரச்சினைக்கு யோகமே ஒரு தீர்வு என்பதை நாம் எமது இதயங்களுக்குள் உணர்ந்துள்ளோம். நாம் ஒவ்வொருவரும் சிக்கல்களும் மன இறுக்கங்களும் உடையவர் களாகவே இருக்கின்றோம். அத்துடன் எல்லா வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குமான இறுதி மருந்து யோகம் என்பதை ஏற்க எமது மனச்சாட்சி எம்மை தூண்டி வந்துள்ளது. எமது சொந்தக் கருத்துகளுக்கு இணங்க வாழ்க்கையின் இறுதி உண்மையாகக் கருதும் யோக

*வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ அப்படியேதான் உழைப்பும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தைத் தவிர இறுதியில் வேறெவராலும் உதவ முடியாதென்பதை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். தியான யோகத்தை வேறு யாரோ எமக்குச் சொன்னதனாலோ, ஏதோ யோகநூல் அதனைப் புகழ்ந்ததனாலோ நாம் அதனை மேற்கொள்வதில்லை. அப்படி அதனை மேற்கொள்வதாயின், வேறொருவர் மதிய அல்லது இரவு உணவுக்குப் போகும்படி கூறியதனால் நாம் அதற்குப் போவதை ஒத்ததாகும். எனவே, அது அத்தியாவசியம் என்று உணர்ந்ததனால்தான் நாம் அதற்குப் போகின்றோம். யோகப் பயிற்சிக்கான இத்தேவையை நாம் உணர்வதனாலேயே அத்தேவை உண்மையானதாக இருக்கிறது.

## 03) மனநிலை

மனம் ஓர் ஏமாற்றுக்காரன். அது கணத்துக்குக் கணம் எப்பொழுதும் எம்மை ஏமாற்றும். ஏனெனில் அது ஒரேநிலையில் தொடர்ந்து இருப்பதில்லை. மனநிலைகள் பெரும்பாலும் ஒவ்வொரு நாளுமே மாறுகின்றன. அத்துடன், அது பொருள்களால் திருப்தியடைவது இல்லை. மனம் ஒருபொழுது தனது வாழ்வில் மிக முக்கியமானதாகக் கருதிய விடயத்தில்கூட அதிருப்தி அடையக்கூடியதாகும். எமது சொந்த மனதைக் காட்டிலும் புரிந்துகொள்ளுவதற்குக் கடினமான விடயம் வேறேதும் இல்லை. எமது மனம் திசையறி கருவிபோல ஒரு நிலையில் இருந்து வேறொரு நிலைக்கு நகருகிறது. எனவே எம்மில் பலரும் யோகப் பயிற்சியில் தஞ்சம்புக நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருக்கிறபோதும் நாம் ஏதோ ஒரு வகையில் மனதின் மாற்றங்களுக்கு உட்படுபவர்களாகவே இருக்கின்றோம். "நான் அவ்வாறு உணருவதில்லை" என்பதே நாம் அடிக்கடி கூறும் கருத்தாகும். ஆனால் நாம் அவ்வாறு இல்லை என்று ஏன் உணரவேண்டும்? என்ன நிகழ்ந்துள்ளது? அத்துடன் "என்ன நடந்துள்ளது என்பதை நான் அறியேன்" என்று மட்டும் நாம் சொல்லுகின்றோம்.

## 04) தயாரின்மை

எமது மனம் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லை எனக் கூறுவதாகவே அதன் அர்த்தம் இருக்கும். யோகப் பயிற்சியை மேற்கொள்வதுகூட மனதின் ஒரு நிலையாக இருக்கக் கூடும். அத்துடன் அது புரிந்துணர்வின் உதயமான உண்மை உறுதிப்பாடும் அன்று. இதனை ஞாபகப்படுத்திக்கொள்வது முக்கியம். மனதிற்கு எண்ணற்ற பல நிலைகள் இருப்பதில் யோகம் ஒன்றாகவும், அது மிகவும் நம்பமுடியாத மனநிலையாகவும் இருக்கலாம். ஆதலால் அந்த மனநிலையும் மாறலாம். நாம் தியானத்திற்காக அமரும்போது உணரும் பிரச்சினைகள் அடிப்படையில் மனம் தயார்நிலையில் இல்லாததாலேயே வருகின்றன. வெளிப்படையாக நாம் தியான முயற்சியை மேற்கொள்வதாகத் தோன்றினாலும் அப்பிரச்சினைகள்மூலம் மனம் தன்னைத் தயாராக்கிக்கொள்ளாமையே உண்மையாகும். பல தடவைகள் மேலெழுந்த வாரியாக மட்டுமே நாம் விடயங்களை ஏற்றுக்கொள்ளுகின்றோம். அத்துடன் எமது அடிப்படை மனப்பாங்கில் நாம் எதனையும் ஏற்றுக்கொள்ளத் தயாரில்லாமலே உள்ளோம்.

*தோல்வி அடைந்த பிறகும் இன்னும் ஒருதடவை முயற்சி செய்வதே வெற்றிக்கான வழி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05) தீவிர மனப்பான்மை

யோகத்தை ஏற்றுக்கொள்வது என்பது ஆன்மிக முயற்சியாளரின் பூரண ஆன்ம மனப்பான்மையாக இருக்கவேண்டும். எனவே யோகத்தை ஏற்றுக்கொள்வது ஏதோ ஒரு வகையில் சூழ்நிலையினால் பெற்ற ஒரு மேற்போக்கான மனோபாவமாக இருக்கக்கூடாது. அத்துடன் வாழ்க்கையின் பெரும் குறிக்கோள் உண்மையின் பூரணத்துவம் ஆதலால் அதனை அடைவதற்கான எமது தயார்நிலையும் எமது பக்கத்திலுள்ள ஒரு முழுமையாக இருக்கவேண்டும். எனவே, எமது குறிக்கோள் வாழ்க்கையின் ஒரு முக்கியமான விடயமாக இருப்பதால் ஒரு மாறும் மனப்பான்மையும், அரைகுறையான ஏற்றலும் திருப்திகரமானவை அல்ல. இவை யாவும் கீதையின் அத்தியாயங்களில் வெவ்வேறு இடங்களில் சுருக்கமான முறையில் எடுத்தாளப்பெற்றிருக்கின்றன. ஏன் நாம் மாறுகின்ற மனோநிலைகளையும், முரண்பாடான ஆசைகளையும் வைத்திருக்கிறோம் என்பதற்கு அவை ஒரு குறிப்பைத் தருகின்றன. அவை எமது சொந்த ஆன்மாவைக்கூட ஆச்சரியப்படுத்தும். கீதையின் ஆறாவது அத்தியாயத்தில் இந்த வினாவுக்கான விடை நாம் எமது செயற்பாடுகளில் அடிக்கடி மிகவும் தீவிரமாக இருப்பது சாத்தியம் என்பதனை உணரவைக்கின்றது. எமது ஈடுபாடுகளிலும், எமது உறவுகளிலும் நாம் நிதானமானவர்களாகவும், அவற்றோடு பொருந்தியவர்களாகவும் இருப்பதில்லை. இது எமது ஒரு தீவிர மனப்பான்மை ஆகும். நாம் ஒன்றை வெறுக்கும்போது இதயபூர்வமாக அதனை நிந்தித்து மறு அந்தத்திற்குச் சென்றுவிடுகின்றோம். நாம் ஒரு சமநிலை மனப்பான்மையைப் பேணுவது மிகவும் கடினம் என்று கண்டுள்ளோம். நிதானமான நோக்குடையவராக இருப்பது இலகுவாகும். நாம் ஒன்றில் அதிகமாக உண்கிறோம் அல்லது உண்ணாமலே இருக்கிறோம். இவை இரண்டும் மிக இலகுவானவை. "நான் சாப்பிடப் போவதில்லை; ஒரு வாரத்திற்கு விரதம் இருக்கப்போகிறேன்" என்று திடீரென அறிவிக்கின்றோம். உடல், மனம், எமது உறவுகள், எமது செயற்பாடுகள் என்ற இவற்றில் ஒன்றையாவது பாதிக்காத வகையில் பசியைக் கட்டுப்படுத்துவது ஓரளவு இலகுவானதே.

## 06) ஒத்திசைவு

யோகத்தின் ஒத்திசைவுக் காரணியை கீதை அழுத்திக்கூறும் அதேவேளை எல்லாவற்றையும் கடந்த ஒரு நிலையில் பூரணத்துவத்தோடு ஆன்மாவின் இறுதி ஐக்கியத்திற்கு மட்டும் அந்த ஒத்திசைவை அது குறுக்கிக்கொள்ளவில்லை. இசைவாக்கம் என்ற முறையில் யோகம் வாழ்க்கையின் ஒவ்வொரு மட்டத்திலும், சமையலறை - குளியலறை - சமூக உறவுகள் - சொந்த தொழில் முதலானவற்றில்கூட அதன் பொருத்தப்பாட்டைப் பிரயோகிக்க வேண்டும் என்று பல்வேறு இடங்களில் கீதை எமது மனங்களுக்கு மீண்டும் மீண்டும் வழங்கி வந்திருக்கின்றது. நாம் சாப்பிடும்போதும், நித்திரை செய்யும்போதும், பொழுதுபோக்கில் ஈடுபடும்போதும் எம்மிடம் ஓர் ஒத்திசைவு இருக்கவேண்டும். அத்துடன் எதுவித தீவிர மனப்பாங்கும் சாப்பிடும்போதோ, நித்திரை செய்யும்போதோ அளவுக்குமிஞ்சி உடல், மனம் என்பவற்றின் தேவை இருப்பதனை நாம் விலக்கிக்கொள்ள வேண்டும். (தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தங்களும் சிந்தனைகளும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

பல்வேறு கொள்கை கோட்பாடுகளை உள்ளடக்கி, உருப்பெற்றவைதான் சித்தாந்தங்கள். மேலும் மனிதர்களிடையே பல்வேறு கொள்கை கோட்பாடுகள் இருப்பதற்கு காரணம் இயற்கையின் இயல்பில் இருக்கும் முரண்பாடுகள் மற்றும் அறிவியல்கள் பரிணாம வளர்ச்சியில் உருவானமையுமாகும்.

உதாரணம் முன்னோர்களின் ஆன்மாக்களை தெய்வங்களாக வழிபடுவதன் தொடர்ச்சிதான் அவதாரக் கோட்பாடுகள். ஆனால் ஆன்மாவால் உடலைவிட்டுப் பிரிந்து தனித்தியங்க முடியாது. ஆன்மா உடல் கருவிகளைக் கொண்டே சுக துக்கங்களை அனுபவிக்கமுடியும் என்ற கோட்பாடும் இவற்றை மத நம்பிக்கைகளில் உள்வாங்கியே மறுபிறப்புக் கோட்பாடுகள் உருவானது. மறு சமயங்களிலும், மறுமை என்ற கோட்பாடும் மறுபிறப்புகளுக்கு ஒத்த கோட்பாடாகும்.

ஆக ஆன்மா உடல் கருவிகள் இன்றி இன்ப துன்பங்களை அனுபவிக்க முடியாது என்பதுடன் ஒருவர் செய்த பாவ புண்ணியங்களை அனுபவிக்கவும் மீண்டும் பிறப்பெடுக்க வேண்டும் என்ற கோட்பாடுமாகும்.

எவ்வாறாயினும் மத நம்பிக்கைகளில் மறைமுகமாக, ஆன்மீக வழிபாடுகள் இருக்கின்றது. சைவ சமயத்திலும், சைவ சமயத்தை சார்ந்த சமயங்களிலும் மனித வாழ்வுடன் தொடர்புபட்டும் படாமலும் மாய உலகில் நிகழ்வது போலவே அவதாரக் கோட்பாடுகள் காட்டப்பட்டும் உள்ளன. வைணவ சமயத்தில், முதல் மூன்று அவதாரங்களும் தெய்வ நிலையில் காட்டப்பட்டாலும் மற்றைய அவதாரங்கள் பூமியில் பிறந்து இறந்தவர்களாகவே காட்டப்பட்டுள்ளது. மறுசமயங்களிலும் பூமியில் பிறந்து இறந்தவர்களையே புனிதர்களாக போற்றுகின்றார்கள்.

முன்னோர்கள் ஆன்மீகம் ஆலயம் சார்ந்துதான் தமது அறிவியல்கள் அடுத்த சந்ததிகளுக்கு கிடைக்க சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும், சான்றாதாரங்களைப் பாதுகாக்கும் விழுமிய வாழ்க்கைகளையும் வாழ்ந்தார்கள். மேலும் வழிபாடுகளிலும் கிரியைகளிலும் கூட, வரலாற்றாதாரங்கள் பாதுகாக்கப்பட்டன. கூடவே ஆன்மீக சக்திகளும் தெய்வீக நிலையில் பல்வேறு கருத்தம்சங்களை பாதுகாத்தன. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட ஆன்மீகம் அறிவியல்கள் மற்றும் வரலாறுகளே, வேதங்களாயும் ஆகமங்களாயும் புராணங்களாயும் இதிகாசங்களாயும் இயல் இசை நாடகமாகப் பாதுகாக்கப்பட்டு, எழுத்தில் ஆவணப்படுத்தப் பட்டனவாகும்.

எவ்வாறாயினும், கோட்பாட்டு முரண்பாடுகளும் கூடவே அறிவியல் பரிணாமங்களும் புராண இதிகாசங்களுக்குள் ஆவணப்படுத்தப்பட்டும் உள்ளன தவிர அறிவு அறியாமைகளும் காணப்படுகின்றது.

*எல்லாம் இழந்தாலும் கலங்காதே! வெறும் பாத்திரம்தான் நிரப்பப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சிந்தனைகள் அற்ற நிலையில், மன ஒடுக்கத்தில் வேதங்கள் நேரடியாகவே இறைவனிடமிருந்தே வந்தன என்ற கோட்பாடுகளும் காணப்படுகின்றது. இவ்வாறு வேதங்கள் மனித சிந்தனைகள் கலக்காது, தூய வடிவத்தில் இறைவனிடமிருந்து வந்திருந்தால் குறை நிறையில்லாது வேதங்கள் பூரணத்துவமானதாகவும் அறிவியல் முரண்பாடுகள் (அறிவு அறியாமைகள்) இல்லாது இருக்கவேண்டும் என்பதும் மிகத் தொன்மையான கோட்பாடாகவும் கூடவே இருக்கின்றது.

இவ்வாறு வேதங்கள் நேரடியாக இறைவனிடமிருந்து வந்திருந்தால் ஆண்டான் அடிமைகள் இல்லாது, அரசர் இருந்தாலும் அரசரும் ஒரு குடிமகனாக, குற்றச்செயல்கள் இல்லாது குடும்பத்தகராறுகள் இல்லாது மக்கள் வாழ்ந்தால் சட்டமன்றங்கள் நீதிபதிகள் தேவைப்படாது. அறிவுகள் அறிவுச்சாலைகள் தேவைப்படாது. புதிய கண்டுபிடிப்புக்கள் அறிவு ஆராய்ச்சிகள் தேவைப்படாது தவிர ஆன்மீகங்கள் அவதாரங்களும் தேவைப்படாது.

ஆனால் இறைவன் இயற்கையில் நன்மை தீமைகளையும் அறிவு, அறியாமைகளையும் படைத்து அறிவியலை பரிணாமத்தாலும் படைத்து, நேரடியாக இறைவன் நன்மை தீமைகளில் தலையிடாது, அவதாரங்களைத் தோன்றச்செய்தார் என்ற கூற்றே, அவதாரங்களையும் ஆன்மீகங்களையும் வலுவுள்ளதாக்குகின்றது.

இந்தவகையில் சித்தாந்தங்கள் மனித சிந்தனைகளில் இருந்து தோன்றினாலும் இயற்கைக்கு அதிபதி இறைவன் என்பதால் சித்தாந்தங்களுக்கும் இறைவன் விதியே காரணம் என்ற கோட்பாடுகளும் காணப்படுகின்றது.

இவ்வாறு வேதாந்தங்களும் சித்தாந்தங்களும் முரண்பட்டுக்கொண்டாலும் மனித சிந்தனைகளை மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்தி, மனிதர்களை ஒழுங்குபடுத்துவதற்கே, வேதாந்தங்களும் சித்தாந்தங்களும் உருவானது. இதனால் ஒரு வேதாந்தத்திற்குள்ளோ சித்தாந்தத்திற்குள்ளோ ஊறிப்போன ஒருவர் உலகில் உள்ள அனைத்தையும் தனது வேதாந்தத்திற்குள்ளாகவோ, சித்தாந்தத்திற்குள்ளாகவோ காண்பார்கள். ஆனால் பல சித்தாந்தங்களை அறிந்தவர்களால்தான் உலகில் சித்தாந்தப் புரட்சிகளும் ஏற்பட்டு இருக் கின்றது.

உதாரணம் சுவாமி விவேகானந்தர், இவர் ஒரு கடவுள் மறுப்பாளராகத் திகழ்ந்தவர். இதற்குக் காரணம் இவர் வாழ்ந்த காலத்தில் உருவாகியிருந்த சோசலீச சித்தாந்தங்கள் ஆனால் காளி உபாசகரான ஸ்ரீ ராமகிருஸ்ண பரமஹம்சரிடம், காளியருளால் ஆன்மீகத்தை உணர்ந்து கொள்கின்றார். மேலும் அந்தக் காலத்தில் பரவியிருந்த சோசலீச சித்தாந்தத்தை எதிர்கொள்ள முடியாமல், ஒன்றுக்கொன்று முரண்பாடான சித்தாந்தத்தை கொண்டிருந்த மதங்கள் இணைந்து, சர்வமத மாநாட்டை அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நடத்தியிருந்தன. அங்கு சுவாமி விவேகானந்தரும் அழைக்கப்பட்டிருந்தார். மேலும் அவர் அங்கு உரையாற்றும் போது சபையோரைப் பார்த்து சகோதர சகோதரிகளே என விளித்துப் பேசி உலகப்புகழ் அடைகின்றார். சகோதரத்துவம் என்பது உலகில் துளியளவேனும் இல்லாதிருந்த காலம். பிரபுக்களாவும், தலித்துக்களாகவும் மக்கள் பிளவுபட்டிருந்த காலம். மனிதர்களை ஆடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள்போல் விற்று வேண்டும் சட்டங்களே இருந்த காலம் சுவாமி விவேகானந்தர் ஆன்மீகத்தை உணர்ந்ததால், மதநம்பிக்கைகளின் மீதான வெறுப்பு மறைந்ததே தவிர அவர் தான் கொண்டிருந்த சித்தாந்தத்தை தூக்கியெறியவில்லை. மாறாக மத சித்தாந்தங் களுக்கூடாகவே பார்த்தார்.

சுவாமி விவேகானந்தர் காளியருளாலே ஆன்மீகத்தை உணர்ந்தார். இதனால் காளியருளை உலகறியச் செய்ய வேண்டும் என்று நினைக்கவில்லை, மாறாக தனது சித்தாந்தங்களை இறை சித்தாந்தமாகவே பார்த்தார். மலம் அள்ளுகின்றவனைக்கூட, இறை வனாக வழிபட்டார். எங்கும் எதிலும் இறைவனைக் கண்டார்.

பொருள் இல்லாதவன் பொருளை திருடினான் என்றால் நம்பலாம். அறிவில்லாதவன் அறிவைத் திருடினான் என்றால் நம்பலாமா? அறிவுக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள்தான் ஆன்மீக நம்பிக்கைகளை நம்புவதற்கு அடிப்படைகளாக திகழ்ந்தன. ஆனால் கல்லாத மேதைகள்கூட, உலகில் தோன்றி அறிவியல் புரட்சிகளையும் செய்து இருக்கின்றார்கள். உதாரணம் கவிஞர் கண்ணதாசன் இவர் ஒரு திராவிட சிந்தனையாளராகவும் கடவுள் மறுப்பாளராகவும் திகழ்ந்தவர். இவர் ஆன்மீகத்தை உணர்ந்து அர்த்தமுள்ள இந்துமதத்தை மட்டுமல்ல யேசு காவியத்தையும் எழுதினார்.

காகம் கறுப்பு. கறுப்பெல்லாம் காகமாகுமா? ஆன்மீகத்தை உணர்ந்தவர்கள் எல்லோருமே ஒத்த கருத்துடைய சித்தாந்தவாதிகளாக உருவானார்களா? ஆன்மீகத்தை உணர்ந்தவர்கள் அல்லது ஆன்மீகவாதிகள் பலர் அடிப்படை வாதிகளாக இருக்கிறார்கள். தவிர மூடக்கொள்கைகளுக்குள் சிக்கி, அகப்பட்டுக்கொண்டவர்களும் இருக்கின்றார்கள்.

இந்தவகையில் புராண இதிகாசங்களில் பதிவாகியுள்ள சித்தாந்த முரண்பாடுகளையும் அறிவியல் பரிணாமங்களையும் ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு காலத்தில் மனிதர்கள் தமது வாழ்வியல் அனுபவங்களைக்கொண்டே அறிவியல் களைக் கண்டுபிடித்தார்கள். முக்கியமாக ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதற்கு கவர்ச்சிதான் காரணம் எனக் கண்டுகொண்டார்கள். தவிர ஆண் வலிமையானவனாகவும் பெண் ஆணைச்சார்ந்து இயங்குவதாலும் இயக்கங்களுக்கு மூலமாக ஆணே இருப்பதாகவும் கருதினார்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் கோள்களும் ஒரு ஒழுங்கில் இயங்குவதற்கு கவர்ச்சிதான் காரணம் என்றும் கண்டுகொண்டார்கள். தவிர சூரியனை சார்ந்துதான் மற்றைய கோள்களும் இயங்குவதாக முக்கியமாக பூமி ஒரு கோள் என்பது மக்கள் அறிந்து இராததால், சூரிய சந்திரனை முறையே ஆணாகவும் பெண்ணாகவும் வகுத்துக்கொண்டார்கள். மேலும் சூரியனை நெருப்புக்கோளாகவும், சந்திரனை நிலக் கோளாகவும் கொண்டு கோள்களையும் குறிப்பாக பூமியையும் வேறுபடுத்தக் கற்றுக் கொண்டார்கள்.

இந்தவகை ஆணாதிக்க வம்சங்களுக்கு சூரிய வம்சமாகவும், பெண்ணாதிக்க வம்சங்களுக்கு சந்திரவம்சமாகவும் பேரிட்டுக்கொண்டார்கள். மேலும் சூரிய வம்சங்களுக்கு குறியீடாக முருகனையும் சந்திர வம்சங்களுக்கு குறியீடாக பிள்ளையாரையும் குறித்துக்

***மெதுவாக நடக்கும் தோல்வியை வேகமாக ஓடிப்பிடிக்கிறது சோம்பல்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். இவ்வாறு வம்சங்களும் கூடவே வம்ச முரண்பாடுகளும் ஏற்பட்டபோது இவை சித்தாந்த முரண்பாடுகளையும் அறிவியல் முரண்பாடுகளையும் ஏற்படுத்தியது. இந்த சித்தாந்த முரண்பாடுகள் அறிவியல் முரண்பாடுகளாகி முறையே முருகனுடைய விஸ்வரூப தரிசனத்திலும் பிள்ளையாருடைய விஸ்வரூப தரிசனத்திலும் புராணங்கள் பதிவாக்கியும் உள்ளது.

அதாவது முருகனுடைய விஸ்வரூப தரிசனத்திலே ஆகாயம் மட்டுமே காட்டப் பட்டுள்ளது. நிலம் (பூமி) காட்டப்படவில்லை. பிள்ளையாருடைய விஸ்வரூப தரிசனத்தில் நிலம் (கோள்கள்) காட்டப்பட்டுள்ளது. ஆகாயம் காட்டப்படவில்லை. புராண இதிகாசங்கள் ஒரே காலத்தில் பல் நோக்கை பிரதிபலிக்கக்கூடியதாக உருவாக்கப்பட்டமை மிகப்பெரிய அற்புத ஞானமாகும். அதாவது முருகனுடைய புராணம் பிற்காலத்தில் உருவானமையால் பூரணத்துவமான பிரபஞ்ச தத்துவம் முருகனுடைய விஸ்வரூப தரிசனத்திலே காட்டப் பட்டுள்ளது.

அதாவது பூமி மற்றும் வானம் என இரண்டு அலகாகவே இந்தப் பிரபஞ்சம் இருப்பதாகவும், மிகப்பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்படுத்துகின்ற மழை கீழே விழாது எவ்வாறு இருக்கின்றது என்று கற்பனை செய்து சைவ சமயத்தவர்கள் வானம் இறைவனின் தலையில் இருப்பதாகவும் வைணவ சமயத்தவர்கள் வானம் இறைவனின் தொப்புள் கொடியில் இருப்பதாகவும் நம்பினார்கள். அதாவது வானம், பூமியின் மொட்டைமாடியாகவே இருப்பதாக நம்பியவர்கள் மிகப்பெரிய சுனாமிகள் ஏற்பட்டு, நிலம் கடலாகவும், கடல் நிலமாகவும் மாறியபோது கடலுக்கு அடியில் பாதாள உலகம் இருப்பதாகவும் முறையே மேலுலகம், பூமி, பாதாள உலகம் மூன்று அலகாகவே பிரபஞ்சம் இருப்பதாகவே நம்பினார்கள்.

பிற்காலத்தில்தான் சூரியனை மையமாக வைத்து கோள்கள் இயங்குவதாகவும், இந்த ஞாயிற்றுத்தொகுதிபோல் பல ஞாயிற்றுத் தொகுதிகள் இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படுவதாகவும் இவையே வானில் நட்சத்திரங்களாக ஒளிர்வதாகவும் நம்பியமையை முருகனுடைய விஸ்வரூப தரிசனத்தில் புலப்படுகின்றது. இவ்வாறு முருகனுடைய விஸ்வரூப தரிசனம் முருகன் குறிஞ்சி (மலை) கடவுள் என்பதையும் சூரியவம்சத்தைப் பிரதிபலிக்கும் கடவுள் என்பதையும் இயற்கையே இறைவன் என்பதையும் இவற்றுக்கு மேலதிகமாக அறிவியல் பரிணாமங்களையும் காட்டுகின்றது.

சோசலீச சித்தாந்தம் கால்மாக்ஸ்சால் முன்வைக்கப்பட்டாலும் மிகத் தொன்மையான எண்ணக்கருக்களில் இருந்தே தோன்றியதாகும். காரணம் மனிதர்களிடையே காணப்படுகின்ற சுயநலமே சொத்துக்கள் சேர்க்கின்ற ஆசையென்றும் ஆண்டான் அடிமைத்தனங்களுக்கு அடிப்படை என்றும் கருதியதால், அரசுகள் இல்லாத ஆட்சி பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் எனக் கருதியமை இராமாயணத்தில் காட்டப்பட்டு உள்ளது.

நாட்டில் அரசு இல்லாது செருப்பு ஆள்கின்றது. காட்டில் அரசாட்சிகள் இல்லாது வாழ்கின்ற மனிதர்கள் நாட்டில் பிரச்சினைகள் ஏற்பட்டதாக வரலாற்றுப் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதபோதும் பொதுவுடைமை கோட்பாடே ஏகாதிபத்திய ஆட்சிகளுக்கு வித்திட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

காட்டிலே அரசனும் இல்லை ஆட்சியும் இல்லை, சட்டமும் இல்லை அங்கு சுதந்திரமான வாழ்வுமுறை, விரும்பியவர்கள் விரும்பியவர்களுடன் வாழலாம். எத்தகைய வாழ்வு முறைகள் ஏற்பட்டாலும் மனிதர்கள் சுய கட்டுப்பாடுகளுடன் வாழமுடியாதுவிட்டால் வாழ்வே போராட்டம் என்பதை இராமாயணம் தெளிவாக்குகின்றது.

மகாபாரதம் பெண்ணியம் பற்றியும் பெண் விடுதலை பற்றியும் தவிர சகோதரத்துவம் பற்றியும் பேசுகின்றது. உதாரணம் முல்லை நிலத்தை பிரதிநிதிப்படுத்துகின்ற யமதருமனின் மகன் தருமனும் மருத நிலத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்திரன் மகன் அர்ச்சுனனும் நெய்தல் நிலத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பீமனும் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக காட்டப்பட்டும் உள்ளமையாகும்.

இவ்வாறெல்லாம் இருந்தபோதும் காலத்துக்காலம் ஏகாதிபத்திய உணர்வுகள் தலையெடுத்து, புராண இதிகாசங்களின் உன்னத நோக்கங்களை தலைகீழ் ஆக்கியிருக் கின்றது.

உலகில் உள்ள எல்லாச் சித்தாந்தங்களுமே மனித சமூகங்கள் பிணக்குகள் இல்லாது வாழ்வதை நோக்காகக் கொண்டு சிந்தித்தாலும் படைப்புக்கள் பரிணாமம் என்பது முரண்பாடுகள் என்பதும் இயற்கையின் இயல்பு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். வெறும் சித்தாந்த மோதல்கள் மட்டுமே மனித வாழ்வியல் பிரச்சினைகளுக்கு தீர்வாகாது. மாறாக புரிந்துணர்வே உலக அமைதிக்கு வழிவகுக்கும்.

**தெளிவுரை:**

வேதங்கள் இறைவனிடமிருந்து நேரடியாக வந்தவை என நம்பப்படுகின்றது. சித்தாந் தங்கள் மனித சிந்தனைகளில் இருந்து வந்தாலும் தெய்வீக ஞானங்களும் கூடவே இறைவனே அனைத்துக்கும் மூலமாய் இருப்பதால், இறைவனுடைய விதியும் சித்தாந்தங் களுக்கு காரணமாக இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. மேலும் கூடுவிட்டு கூடு பாயும் சித்தர்கள் மூலமும் சித்தாந்தங்கள் கிடைக்கப்பெற்று இருக்கின்றதென்ற சமயப் பதிவுகளும் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் நான் எனது வாழ்வில் ஏற்பட்ட அனுபவ அறிவுகளைக் கொண்டு பகுத்தறிவுக்குட்பட்ட சிந்தனையைக் கொண்டே ஆய்வாகவே எழுதி வருகிறேன். இருப்பினும் எனது முக்கிய அனுபவங்களை சில விளக்கங்களுக்காக பதிவு செய்கின்றேன். அதாவது நான் ஒரு காலத்தில் பல்வேறு சித்தாந்தங்களை அறிந்திருந்தபோதும் மறுபிறப்புக் கோட் பாட்டில் நம்பிக்கையுடையவனாகவும் இறைவனே நேரடியாக இந்த இயற்கையை இயக்கு வதாகவும் நம்பியிருந்தேன். ஆனாலும் எனக்குள் அற்புத அறிவு ஆற்றல் இருந்தது. இது இந்தப் பிறப்புடன் பயனற்றுப் போய்விடுமா? என்ற கவலை இருந்தது. நான் ஆன்மீகத்தை உணர்ந்தபோது ஆன்மா அழியாது என்பதை உணர்ந்துகொண்டேன். தவிர ஆன்மாக்களையே கடவுளாக வழிபடுவதாகவும் விளங்கிக்கொண்டேன். தவிர இறைவன் என்று ஒன்று இல்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை தானாகத் தோன்றி தன்னியக்க முறையில் இயங்குவதாகவுமே கருதினேன். ஆனால் காலம் எனக்கு பல்வேறு அனுபவங்களைத் தந்து சிந்திக்க வைத்ததன் தொடர்ச்சி தான் கவிதைகளாக கட்டுரைகளாக என்னை தொடராக எழுதத் தூண்டுகின்றது.

இந்தவகையில் நான் ஆன்மீகத்தை உணர்ந்துகொண்டமைதான் எனது அறிவியல் முயற்சிகளுக்கு அடிப்படை என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால் எனது உடலுக்கோ உள்ளத்திற்கோ நோவோ, வலியோ இல்லாமல் தியானத்தின் வாயிலாக இவைகளைத் தந்துவிடவில்லை. மாறாக உலகில் யாவருமே அனுபவித்திராத துன்பங்களை எல்லாம் பட்டு உணர்ந்து, காலம் எனக்கு தந்த கடமையாக எண்ணியே எழுதிக்கொண்டு இருக்கின்றேன்.

ஆகவே எனது கருத்துக்கள் வேதங்களோ, சித்தாந்தங்களோ அல்ல. சிந்தனைகளின் தொகுப்பு இதுவரை சொல்லியவைகளைவிட சொல்லவிடாமல் எனக்குள் புதைந்து கிடக்கும் அறிவியல்கள்தான் அதிகம். ஆனாலும் ஞானச்சுடர் சஞ்சிகை மட்டும்தான் எனக்கும் சந்தர்ப்பம் தந்து என்னையும் மனிதனாக ஏற்றுக்கொள்கின்றது. நான் ஒரு அறிவாளியென்று சொல்ல வரவில்லை. சில வேளைகளில் நான் ஞானச்சுடர் சஞ்சிகைக்கு கஷ்டங்களைத் தந்துவிடுகின்றேனோ தெரியாது. எவ்வாறாயினும் தொடர்ந்து ஆதரவு தரும் ஞானச்சுடருக்கு எனது நன்றிகள்.

## உலகுக்கு ஒளியாகத் திகழ்பவன்!

***பல்லவி***

வண்ண மலர் மீதினிலே வந்துதித்தவன்! - எங்கள்
வாழ்வுக்கு ஒளியான கதிர் வேலவன்!

(வண்ண)

***அனுபல்லவி***

எண்ணமெல்லாம் நிறைந்து எமை ஆள்பவன்
ஏறுமயில் ஏறி வந்து எமைக் காப்பவன்!

(வண்ண)

***சரணம்***

தீராத வினைகளைத் தீர்த்து வைப்பான் குமரன்!
திருமாலின் மருகனாய் விளங்கிடும் சண்முகன்
பாரெங்கும் கோவில்கொண்டு பக்தர் குறை தீர்ப்பவன்!
பைந்தமிழ்க் கடவுளாய் சிந்தையில் உறைபவன்!

(வண்ண)

கருணை முகங்காட்டிக் காட்சி தருபவன்!
கந்தா! என்றழைக்க, வந்தருள் புரிபவன்!
உருகிடும் அடியார் உள்ளங்களில் உறைபவன்!
உலகுக்கு ஒளியாக என்றும் திகழ்பவன்

(வண்ண)

*-கி. குலசேகரன்-*

*துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல் வேறு ஒன்றாலும் போதிக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 78

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 ரசித்திட இறைவனார் படைத்திட்ட சிலவற்றை
ருசித்திட நாங்கள் நினைப்பதற்கே கலியுகம்
ரசித்திடப் படைத்ததை ரசிப்போடு நிறுத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

02 காத்தலை அழிப்பதும் அழித்தலைக் காத்தலும்
காலத்தின் கோலமல்ல அதுவே கலியுகம்
காத்தலைக் காத்துநாம் அழித்தலை அழித்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

03 மதித்திட இறைவனார் படைத்திட்ட சிலவற்றை
மிதித்திடப் படைத்தாய் மிதிப்பதே கலியுகம்
மதித்திடப் படைத்ததை மதித்தேநாம் நிறுத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

04 இயற்கையை இறைவனின் அம்சமாய்க் கருதாமல்
செயற்கையினாலானதைச் சீண்டலே கலியுகம்
இயற்கையை இறையதாய் மதித்துநாம் நடத்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

05 பரிணாமம் கண்டு நாம் பரிதாபம் விட்டதை
பசியாற நினைப்பதே பாரினிற் கலியுகம்
பரிணாமம் கண்டுநாம் பரிவோடு நடந்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

06 கெட்டதென்று கண்டால் நாம் எட்டவே செல்லாமல்
கிட்டவே சென்றதை அணைப்பதே கலியுகம்
கெட்டதென்று கண்டுநாம் எட்டவே சென்றிட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

*எதையும் செய்யாதிருப்பதைவிட ஏதாவது ஒன்றை நாள்தோறும் செய்வதுமேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பாதியில் வாழ்க்கையை அழிக்குமென்று தெரிந்த ஒன்றை
வீதியில் விலை கொடுத்து வாங்குதலே கலியுகம்
முழுமையான வாழ்க்கையை நாம் முறைகேட்டால் கெடாவிட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

08 அவரவர் கடமையை அவரவர் செய்யாமல்
பலன்பெற நினைப்பதே பாரினில் கலியுகம்
அவரவர் கடமையை அவரவர் செய்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

09 நிசத்தினை மறந்துநாம் நிழலினை நினைந்தே
பசப்பினில் வாழ்வதே பாரினிற் கலியுகம்
நிழலினை நீக்கிநாம் நிசத்தினை மதித்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

10 இறைவனை மதியாமல் ஆத்மாவை உணராமல்
நம்பிக்கை யின்றி நாம் வாழ்வதே கலியுகம்
இறைவனை நம்பி நாம் ஆத்மாவை வளர்த்திட்டால்
கலியுகம் நம்மிடம் தோற்றுமே ஓடுமாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் சுவாமிகள்

– திரு எஸ். குணாகரன் அவர்கள் –

சைவத் திருமுறைகளில் ஈற்றிலமைந்த பன்னிரண்டாவது திருமுறையான திருத்தொண்டர் பெரியபுராணத்தை மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெலாம் விளங்கும்படி அருமருந்தன்ன விருத்தப் பாடல்களினாலே பாடித் தந்த மெய்யடியார் சேக்கிழார் சுவாமிகள் ஆவார். பெருங் காப்பியத்துக்கமைந்த உறுப்புக்களெல்லாம் அமைய பாடிய அதி உத்தம பெரியார் ஆவர். சொன்னயம், பொருனயம், கருத்தாழம் மிக்கதாகிய இப் புராணம் திருத்தொண்டர்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களைப்பற்றி விரிவாக எடுத்து இயம்புகின்றது. செந்தமிழ்ச் செல்வமாகிய இப்புராணம் சிவபக்தி அடியார் பக்தியெல்லாம் அமையவும் கேட்போர் படிப்போர் உள்ளம் உருகும்படியும் இலகுவாக விளங்கத்தக்க வகையிலும் உவமை நயம், அமையப் பாடப்பெற்றுள்ளது. இப் பெரியார் பற்றிச் சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

தொண்டை மண்டலத்திலுள்ள குன்றத்தூரிலே சேக்கிழார் மரபிலே, வேளாண் குலத்தில் அவதரித்த இப் பெரியாரின் பிள்ளைத் திருநாமம் அருண்மொழித்தேவர் என்பதாம். கல்வியறிவொழுக்கங்களிலும் சிவபக்தியிலும் சிறந்திருந்த இவரை அக்காலத்து அரசனாக இருந்த அநபாய சோழ மகாராசன் அழைத்து, அவருக்கு உத்தம சோழப் பல்லவன் என் னும் உயர் விருதினைச் சூட்டி, தம்முடன் சேர்ந்து அரசு செலுத்த உதவியாக வைத்துக் கொண்டான்.

அக் காலத்தில் அநபாய சோழன் சமண காப்பியமாகிய சிந்தாமணியைக் கேட்டு வருதலைக் கண்டு அரசனை நோக்கி அந்தக் காப்பியத்தைக் கேட்பதனால் இரு பிறப்பிலும் கேட்போருக்கு ஒரு பயனுஞ் சேரப்போவதில்லை. ஆனால் இரு பிறப்புக்கும் பயன்தரத் தக்கதாகிய சிவ கதையல்லவா கேட்க வேண்டும் என உரைக்கக் கேட்ட அரசன் அப்படியானால் நீர் கூறும் சிவகதை என்ன? அதைக் கூறியது யார்? அதன் பயன் யாது? அவையெல்லாம் விளங்க நீரேயதை ஓதி உரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அத்துடன் அந்தச் சிவகதையையும் பாடித் தரும்படி கூறி அவருக்கு அதற்கேற்ற திரவியங்களையும் கொடுத்தான். சேக்கிழார் சுவாமிகள் இறைவனை வணங்கிவிட்டு தில்லையம்பலத்தை நோக்கி நடந்தார்.

சிதம்பரத்தை அணுகிக் கூத்தப்பெருமானை வணங்கி அரசன் கேட்டுக்கொண்டபடி சிவனடியார் வரலாறுகளை இங்கிருந்தே பாட வந்தேன் தேவரீர் அடியெடுத்துத் தரவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார். சேக்கிழாரின் வேண்டுகோளுக்கிணங்கிய நடராஜப் பெருமான் "உலகெலாம்" என யாவருங்கேட்க அசரீரியாகத் திருவாய் மலர்ந்தருளினார். அதைக் கேட்ட சேக்கிழார் நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத்தொகையையும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு சித்திரைத்

*எப்போது நீ சரிந்தாலும் இப்படி எண்ணிக்கொள். இது தண்டனை அல்ல எச்சரிக்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாதிரையிற் பாடத் தொடங்கியவர் அடுத்த சித்திரைத் திருவாதிரையன்று பாடிப் பூர்த்தியாக்கி அரசனுக்கு அறிவித்தார். அவர் பாடிய விருத்தத்தொகை 4286. அடியவர்களின் வரலாற்றைக் கூறும் புராணமாதலால் இப்புராணம் பெரியபுராணம் எனப்படுகிறது.

இத் திருத்தொண்டர் புராணத்தில் இறைபக்தி, அடியார் பக்தி, திருக்கோயில் வழிபாடு, செந்தமிழினிமை என்பனவற்றைக் காணலாம். ஒவ்வொரு அடியாரையும் ஆட் கொள்ளும் சிவபிரான் அவரவர்க்குத் தக்கபடி அவர்களை திருவடியிற் சேர்ப்பதை சேக்கிழார் நம்பியாரூரர், நம்பியாண்டார் பாடல்களை ஆதாரமாகக்கொண்டும் தமது அகக் காட்சியிற் கண்டவற்றையும் சேர்த்தே பாடியுள்ளார். பக்தியுடன் இறைவனை வணங்கும் அன்பர்களுக்கு இப் பெரியபுராணம் பெரிதும் துணைசெய்யும்.

சுன்னாகம் குமாரசாமிப் புலவர் சேக்கிழார் நாயனாரைப் பற்றிக் கூறும் ஒரு அற்புத வரலாற்றையும் இங்கே தருகின்றேன். சிதம்பரத்திலே ஆனித் திருவிழா ஒன்றில் சுவாமி தரிசனம் செய்வதற்கெனச் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் வந்தனர். தொண்டை நாட்டரசரும் வந்தார். அந் நான்கு அரசருங் கூடியிருந்த அவையில் அங்கிருந்த ஒரு புலவர் ஔவையாராற் பாடப்பெற்ற

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழவள நாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை
தன்னாடு சான்றோ ருடைத்து.

என்னும் வெண்பாவைப் பாடினார். கேட்ட மூவேந்தரும் எங்கள் நாட்டில் சான்றோரில்லையா?

“தொண்டை நன்னாடு சான்றோருடைத்து” எனச் சொல்லியது என்ன? என்று சிறிது நாணமுற்று தொண்டை நாட்டரசரை நோக்கி “உமது நாட்டில் சான்றோருளர்” என்பதைக் கண்கூடாகக் காட்டக்கூடுமா? எனக் கேட்டனர். அதைக் கேட்ட தொண்டை நாட்டரசர் “சான்றோரிருத் தலைத்தக்க வழி கொண்டு நீவிர் அறிதலே தகுதியாகும்” என்றார். அதன் பின் நூலறிவின் மூலமே ஒருவரைச் சான்றோர் எனத் துணியலாம் என யாவரும் ஒத்துக் கொண்டு பூமியிற் பெரியது யாது? கடலிற் பெரியது யாது? மலையிற் பெரியது யாது? என மூன்று வினாவையும் எழுதி இதற்கு யார் தக்க விடை கூறுகிறாரோ? அவரே சான்றோராவார் என எழுதி அவ்விடமெல்லாம் பரப்பினர். மூன்று வினாக்களுக்கும் யாரும் விடையெழுதாராகச் சேக்கிழார் சுவாமிகளே திருக்குறளில் மூன்று குறள் மூலம் விடை பகர்ந்தாராக, அவரே சான்றோர் எனப்பட்டுத் தொண்டைநாட்டுக்குச் சிறப்புயரச் செய்தாரென்பர். அவை

**01) பூமியிற் பெரியது யாது?**

காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

*தைரியம், புத்தி, நுண்ணறிவு இவை மூன்றும் ஒருவனுக்கு நல்ல நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02) கடலிற் பெரியது யாது?**

பயன்றுக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

**03) மலையிற் பெரியது யாது?**

நிலையிற் பிரியா தடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணம் பெரிது.

கம்பரும்,

மண்ணின் கடலின், மலையிற் பெரியதென எண்ணியெழுதிக் கொடுத்த வேற்புடைத்து என்பர்.

படிக்காசுப் புலவரும்,

அஞ்சொல் முதுதமிழ் நால்வேந்தர் வைகு மலையிலவ்வை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழமுடைத்தெனும் பாடல் விளம்பிப்பினும்
வஞ்சி வெளிய வெனும்பா மொழி தொண்டை மண்டலமே என்பர்.

சேக்கிழார் சுவாமிகளின் சிவத்தொண்டை மெச்சிய சந்தானாசாரியாருள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் 104 விருத்தப்பாக்களால் அவரைப் பாடிப்பரவியுள்ளார். உள்ளன்போடு பெரியபுராணத்தை ஓதிவரின் அது இப்பிறப்பிற் செம்மையான வாழ்வைத் தந்து மறுபிறப்பிலும் சிவபிரான் திருவடி சேர வாய்ப்பளிக்கும் என்பது நாவலர் பெருமானும் அவரைப் பின்பற்றி வாழ்ந்த சான்றோர்களதும் சிவானுபவமும் ஆகும். அவ்வண்ணம் நாங்களும் முயல்வோமாக.

அன்பர்க்கருள் புரிபவனே வா வா வா
ஆற்றங்கரை இருப்பவனே வா வா வா
இறையருளைத் தருபவனே வா வா வா
ஈசனருள் பெற்றவனே வா வா வா
உலகைக் காக்கும் உத்தமனே வா வா வா
ஊக்கமுடன் வாழவைப்பாய் வா வா வா
எண்ணம் போல வாழ்வளிப்பாய் வா வா வா
ஏற்றம் தரும் வேலவனே வா வா வா
ஐயம் எல்லாம் தீர்த்தருள்வாய் வா வா வா
ஒற்றுமையைக் காத்திடவே வா வா வா
ஓசை ஒளி ஆனவனே வா வா வா
ஔடதமாய்த் திகழ்பவனே வா வா வா
ஃ.கு மனம் உருகிடவே வா வா வா
வா வா வா சந்நிதி வேலவனே வா.

*-யூ.பி. ஆனந்தம்-*

*அளவில்லாத வேதனைகளை தாங்கிக்கொண்டு சாதனை படைப்பவன்தான் மேதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

**நல்லூர்த் தேரடியில், செல்லப்பாச்சுவாமிகளின் வாசம்:**

செல்லப்பாச்சுவாமிகள் தேரடியில் அமர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில்; அவரில் பக்திகொண்ட அடியார்கள் பலர் சுவாமிகளிடம் ஏதோ அற்புதச்சக்தி உள்ளமையை உணர்ந்து கொண்டனர். ஆன்மீக ஈடுபாடு கொண்ட பெரியவர்களுக்குச் சுவாமிகள் ஞானி யாகக் காட்சியளித்தார். அத்தகையவர்கள் சுவாமிகளை அணுகி அருள்பெற முயன்றனர்; சிலர் ஆராயவும் தொடங்கினர். இன்னுஞ் சிலர், சுவாமிகளின் உண்மை நிலையை அறியாதவராய்; சிறுவர்கள் உட்பட; அவரின் புறத்தோற்றத்தைப் பார்த்துக் கேலியும் கிண்டலும், பரிகாசமும் செய்தனர். அவர்களை ஏசிப் பேசித் துரத்தி விடுவார். பலருக்கு இது வேடிக்கையாகவும் இருக்கும். உலகியல் பைத்தியம் பிடித்து அலைபவர்களுக்கு எப்படி ஞான நாட்டமும், ஞானச் சிந்தனையும் கொண்டு ஞானானந்தப் பெருவெளியில் இலயித்திருப்பவரை எத்தன்மையர் என அறிந்துகொள்ள முடியும்! தேகத்தில் அபிமானங் கொண்டவர்கள் உலகியல் நாட்டமுடையவர்கள் ஆவர். ஆன்மாவில் அபிமானங் கொண்டவர்கள் ஆன்மீகத்தில் நாட்டமுடையவர்கள். செல்லப்பாச்சுவாமிகள் தேகாபிமானத் தைத் துறந்தவர்; ஆன்மீகத்தில் திளைத்துக் கொண்டிருப்பவர்.

செல்லப்பாச் சுவாமிகளின் புறத்தோற்றத்தைப் பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம் பின்வருமாறு விவரித்துள்ளார். "தலைமயிரைப் பரட்டையாகத் தொங்கவிட்டு, நீராடுதலை வெகுவாகக் குறைத்து; தண்ணீர் படாத கந்தைத் துணிகளை அழுக்கோடு, அலங்கோலமாக அணிந்து; கண்டபடி கையுயர்த்திச் சிரித்து, ஒட்டியுலர்ந்த உடம்பின் மெலிந்த முகம் மலர; உதட்டைவிட்டு, வெளியே மிதந்து தோன்றிய பற்கள் புறந்தெரியச் செல்லப்பாச் சுவாமிகள் காட்சியளித்தார்" தேகாபிமானத்தை முற்றிலும் துறந்தவர் என்பதற்கு இவ் விவரணம் சான்றாக உள்ளது. தற்பற்று, புறப்பற்று யாவும் அற்றவராகச் சுவாமிகள் விளங்கினார்.

மேலும், பல்கலைப்புலவர் கூறுகையில்; "இவ்வாறாக, உடன்பிறந்த சகோதரி, செல்லாச்சி, சகோதர பாசத்தால் ஈர்க்கப்பெற்று உரியவேளைகளில் ஆகாரங்கொண்டு சென்று, கூவியழைத்தால், "போ! போ!, கொண்டுபோ, நீ நஞ்சுபோட்டுக் கொண்டு வந்தாய்" என்று அதட்டிக் கலைத்துவிட்டு, எழுந்து எட்டி எட்டி நடந்து நெடுந்தூரம் சென்று மீண்டும் வந்து குந்தியிருப்பார். தமக்கு விருப்பமுள்ளபோது, ஏதாவது உண்டு, பெரும் பகுதியைக் காகம், கோழி, நாய் உண்ணுமாறு வைத்து வேடிக்கை பார்ப்பார். உயிரினங்களோடு உறவு கொண்டாடியும் வந்தார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்கள் அனைத்திலும், எவ்வித பேதமுமின்றி வைக்கும் அன்பும் கருணையும் ஆன்மநேயம் எனப்படுகிறது.

*அறிவைவிட தைரியத்தினால் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்முயிர்போல் எவ்வுயிரும் தானென்று தண்ணளிகூர் செம்மையர்" என்பவர்களே ஞானியர், சித்தர்கள் ஆவர். தம்முயிர்போல் மன்னுயிர்களையும் நேசித்து அன்பு செய்பவர்களே செம்மையர் எனப்படுபவர்கள். இவர்கள் அன்பும் கருணையும் கொண்ட உள்ளத்தினர்; செம்மனச் செல்வர்கள். சீரியர், மகான்கள், மகா ஞானிகள் ஆவர். செல்லப்பாச்சுவாமிகள், இம் மகாஞானிகள் வரிசையைச் சேர்ந்தவர்.

**மகாஞானி செல்லப்பாச் சுவாமிகள் - அகப்பூசை மகத்துவம்**

"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"

என ஞானிகளின் அகப்பூசை முறைபற்றித் தாயுமானவர் கூறியுள்ளார்.

"பரம்பொருளே! உனக்கென உள்ள கோயில் என் உள்ளமே; இடையறாத தியானமே, துகந்த தூபம்; அன்புதான் அபிடேகம் செய்ய உவப்பான தீர்த்தம். நாம் செய்யும் அகப் பூசையை ஏற்று அருள்புரிவீராக" என்பது இத் திருவருட்பா அடிகள் தரும் பொருள். புறப் பூசை, அகப்பூசை என இறைவனுக்குச் செய்யப்படும் பூசைகள் இரண்டு வகைப்படும். ஆலயங்களில் நித்திய நைமித்தியப் பூசைகள், கிரியைகள் என்பன நடைபெறுகின்றன. இவை புறப்பூசை வகையைச் சேர்ந்தவை. ஞானிகள், யோகிகள், தவசிரேஷ்டர்கள் ஆகியோர் அகப்பூசையில் ஈடுபடுபவர்கள். மானசீகமாக உள்ளத்தில், அகத்தில் நிகழ்த்தப்படுவது அகப்பூசையாகும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

எனத் திருமூலர், அகப்பூசை பற்றிக் கூறுகிறார்.

செல்லப்பாச் சுவாமிகள் அகப்பூசையில் ஈடுபாடு கொண்டிருந்தார். அத்துடன் ஆன்ம நேயம் கொண்டவராகவும் திகழ்ந்தார் என்பதை அவருடைய நடவடிக்கைகள் மூலம் அறியமுடிகிறது.

"இத்தரை மீதினிலேயிந்த நாளினில்
இப் பொழுதே முக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற் களிப்பவர்
தூயவரா மென்றிங் கூதேடா சங்கம்"

இவ்வாறு சீவன் முத்தர் நிலையெய்தி, சுத்த அறிவே சிவம் எனக்கொண்டு ஆனந்தத்தில் சதா திளைப்பவர் தூயவர் ஆவர். சித்தர்கள், ஞானிகள் என்போர் தூயவர். இவ்வாறு மேற்படி பாடலில் சுப்பிரமணிய பாரதியார் குறிப்பிடுகிறார். பாரதியாரும் ஒரு சித்தரே ஆவார். செல்லப்பாச் சுவாமிகள் குருவருள் பெற்றுச் சித்தர் வரிசையில் இடம்பிடித்தவர். அவரும் சீவன்முத்தர் நிலை எய்தி, ஆனந்தக்களிப்பில் மூழ்கியிருந்தார். சுவாமிகளுக்கு "ஊரும் சதமன்று, உற்றார் சதமன்று" அதனால் அவர் எவர்க்கும், எதற்கும் அஞ்சுவதில்லை

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தை சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிலைப்பாட்டில் வாழ்ந்து வரலானார். "தேகம் பொய்யென்றுணர்ந்தீரரை யாராலும் எதுவித தீங்கும் செய்துவிடமுடியாது. அதனால் சுவாமிகள் அச்சமின்றித் திரிந்தார்.

பகலிலே விசர்க்கோலம்பூண்டு, ஊர்சுற்றித் திரியும் செல்லப்பாச்சுவாமிகள் இரவிலே அர்த்தசாமப் பூசைக்குப்பின் நல்லூர் முருகனுடன் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரின் உள்ளத்தில் அருமையும் பெருமையும் வாய்ந்த தெய்வீகச் சிந்தனை வாக்கியங்கள், ஊற்றெடுத்து வெளிவரக் காத்திருந்தன. பக்குவநிலையை அடைந்த உத்தம சீடன் வருவான்; அச்சீடனின் காதில் அம் மகா வாக்கியங்களை உபதேசித்துவிட்டால் தன் பணி நிறைவு பெற்றுவிடும். அதன்பின் அச்சீடன்மூலம் அம் மகா வாக்கியங்கள் சுருதியென உலகத்தவர் எல்லோருக்கும் கேட்கும்; எங்கும் பரவும் என்ற உறுதியுடன் சீடனின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தார் செல்லப்பாச் சுவாமிகள். அந்த ஆளுமை வாய்க்கப்பெற்ற, அதி உத்தம சீடர் யார் என்பதையும் மகா வாக்கியங்கள் யாவை என்பதையும் அடுத்த கட்டுரையில் தெரிந்துகொள்ளலாம். (தொடரும்...

## அவனின்றி அணுவும் அசையாது

கைலாயத்தின் வாசல் காப்போனாக இருந்தாலும், சிவபெருமானை சுமக்கும் பெரும் பேறு பெற்றவர் நந்தியெம்பெருமான். சிவபெருமான்தான் இந்த உலகத்தின் அனைத்து உயிர்களுக்கும் படியளப்பதாக புராணங்கள் தெரிவிக்கின்றன. அப்படி ஒருமுறை உலக உயிர்களுக்கு படியளப்பதற்காக சிவபெருமான் புறப்பட்டார். நந்தி அவரைச் சுமந்து சென்றார்.

செல்லும் வழியில் நந்திக்கு ஒரு சிந்தனை உருவானது. "உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் படியளக்கும் சிவபெருமானையே நாம் சுமக்கிறோம் என்றால், நம்முடைய சக்தி எப்படிப்பட்டதாக இருக்கும்" என்று அவர் நினைத்தார். சிவனே ஜீவனாக இருக்கிறார் என்பது சிவனடியார்களின் கூற்று. அனைத்து உயிர்களின் ஆன்மாவாக சிவபெருமானே இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அப்படி இருக்கையில் நந்தியெம்பெருமான் நினைத்த அந்த ஆணவமான சிந்தனை, சிவபெருமானுக்கு தெரியாமல் போய்விடுமா என்ன? நந்திக்கு தகுந்த பாடம் கற்பிக்க நினைத்தார் சிவபெருமான். உலகை வலம் வந்து கொண்டிருந்த நேரத்தில், தன்னுடைய சடைமுடியில் இருந்து ஒரேஒரு முடியை மட்டும் எடுத்து நந்தியின்மீது வைத்துவிட்டு கீழே இறங்கிக்கொண்டார் ஈசன்.

அதுவரை உலகத்தின் பரம்பொருளான சிவபெருமானையே சுமந்துகொண்டிருந்த நந்திக்கு தன்மேல் இருந்த ஒரே ஒரு முடியை சுமக்க முடியவில்லை. பாரம் தாங்காமல் தள்ளாடினார். அவரால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. தன்னுடைய இயலாமை அவரைக் கலங்கடித்தது. இதுவரை அவர் நெஞ்சில் குடிகொண்டிருந்த ஆணவம் எங்கு சென்றதோ தெரியவில்லை. அவர் சிவனைப் பார்த்து எனக்கு ஏன் இந்த நிலை? எனக் கேட்டார்.

அப்போது சிவபெருமான் "நந்தியே... உன்னுடைய மனதில் இருந்த ஆணவத்தை அழிக்கவும், நானே உலக உயிர்களின் ஆன்மாவாக, உலக உயிர்களின் இயக்கமாக இருக்கிறேன் என்பதை நீ உணர்ந்துகொள்ளவும்தான் இப்படிச் செய்தேன். நான் உன்மேல் இருக்கும்வரைதான் என்னை சுமக்க முடிந்தது. உன்னில் ஆணவம் குடிவந்ததும், நான் உன்னை விட்டு விலகிவிட்டேன். நான் விலகியதால் உன்னுடைய இயக்கமும் நின்றுபோனது" என்றார். உண்மையைப் புரிந்துகொண்ட நந்தியெம்பெருமான் எல்லாம் இறைவனின் செயலால் நடப்பவை என்ற எண்ணத்தை தன் மனதில் ஆழ வேரூன்றிக் கொண்டார்.

*சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன் பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனாரும் சனிபகவானும்

– *திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

நவக்கிரகங்களில் எமக்கெல்லாம் அச்சத்தை உண்டாக்கும் சனிபகவான் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

வான் மண்டலத்திலிருக்கும் கிரகங்களின் சஞ்சாரத்தினால் மனித வாழ்வில் ஏற்றத் தாழ்வு உண்டாகின்றது என்பது எமது முன்னோர்கள் கண்டறிந்த உண்மை. இதனையே சோதிட சாஸ்திரமும் கூறுகின்றது. அதேநேரம், நாம் வாழும்போது செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஏற்பவே அடுத்த பிறப்பில் எமக்கு வாழ்வு அமைகின்றது. ஒருவன் அரச போகத்தில், மனக்களிப்போடும் மன நிம்மதியோடும் வாழ்வதும், ஒருவன் வறுமையால் அல்லற்படுவதும், மேலும் ஒருவன் பலதும் கற்று கல்விமானாகத் திகழ்வதும், ஒருவனது ஜாதகத்தில் கிரகங்கள் அமைவதைப் பொறுத்தே ஆகும். கிரகங்கள் அமைவது அவரவர் முற்பிறப்பில் செய்த வினைகளின் படியேயாம். இத்தகைய கிரகங்களின் தாக்கங்களில் இருந்து சிறிதளவு தன்னும் விடுபட பல்வேறு பரிகாரங்களையும் கிரகதோஷ நீக்க வழிகள், மார்க்கங்களையும், எமது முன்னோர் வழிவகுத்துள்ளமையும் கண்கூடு.

இந்த நவக்கிரகங்களின் இயல்பை மொத்தத்தில் ஆராயின் சூரிய பகவான், மனிதனுக்கு நல் ஆரோக்கியத்தையும் சந்திரபகவான் வாழ்வில் வெற்றியையும், செவ்வாய்க் கிரகம் செல்வத்தையும், புதன் பகவான் நல்ல கூர்மையான புத்தியையும், குருபகவான் என்றழைக்கப்பெறும் வியாழ பகவான் மனிதனுக்கு நாவன்மையையும் நற்சுகத்தையும், சுக்கிர பகவான் தன் திசையில் நற்பலன்களையும், சனி பகவான் மன உறுதி, மனத் தைரியத்தையும், ராகு பகவான் நல்லதோர் வாழ்வினையும், கேது பகவான் குல வளர்ச்சி யையும் தந்தருள்வதாக ஜோதிடம் பகர்ந்துள்ளது. இது பொதுவிதி.

இனி சனி பகவான் பற்றி நோக்குவோம். நவ கிரகங்களில் ஈஸ்வரன் எனும் பட்டத்தை சிறப்பாகப் பெற்றவர் சனி பகவானேயாவர். இதன் காரணமாக சனீஸ்வரன் என்ற நாமம் இவருக்கு உண்டு. சர்வ வல்லமை பெற்ற இவர் நீதி தவறாத, அஞ்சா நெஞ்சத்தோடு தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் என சகலரையும் பாரபட்சம் காட்டாது அவரவர்க்கு சனி திசை நடக்கும்போது அவர்களைப் பீடித்து ஆட்டிப்படைப்பது இயல்பு. இவரால் தீமை ஏற்படுவதுபோல் நன்மையும் ஏற்படுதல் மனித வாழ்வில் கண்கூடு. இதனால் "சனியைப் போல் கொடுப்பவனும் இல்லை. கெடுப்பவனும் இல்லை" என்று ஒரு கூற்றும் உண்டு.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டாத ஈசனையே இவர் பிடித்தவர் என்றால் பாருங்களேன்.

ஈசனைச் சனீஸ்வரன் பிடிக்கின்ற காலம் வந்தபோது உன்னால் என்னைப் பிடிக்க முடியாது என்று கூறிய வண்ணம், ஈசன் ஆழ்கடலில் ஒரு நீரக்குகையுள் தன்னை மறைத்துக் கொண்டார். சனி பீடிக்கும் குறிப்பிட்ட காலம் முடிய வெளியே வந்து ஈசன் சனி பகவானுக்கு சவால் விட்டார். என்னை உன்னால் பிடிக்க முடியாது பார்த்தாயா? இது ஈசன் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப் பதிலாக சனிஸ்வரன் என்ன கூறினார் தெரியுமா? ஐயனே! சர்வ வியாபகரும் அண்ட சராசரங்களையும் ஆட்டிப்படைக்கின்ற ஈசனுமாகிய தாங்களே, எனக்குப் பயந்து 3 நாழிகை நீருக்குள் மறைந்தீர்கள் என்றால், இதைவிட வெற்றி எனக்கு வேறென்ன வேண்டும்! இதுவே யான் உங்களைப் பிடித்த காலமாகும் என்றாராம். அதற்கு ஈசன் என்னும் பாராமல் என்னையும் குறித்த காலத்தில் பிடித்த உமது நேர்மையை உலகுக்குக் காட்டவே இவ்வண்ணம் செய்தேன் என்று திருவாய் மலர்ந்தருளி ஈஸ்வரப் பட்டத்தையும் அளித்து சனியை சனீஸ்வரன் என ஈசன் சிறப்பித்ததாக வரலாறு உண்டு.

சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் புத்திரனாகப் பிறந்த சனிபகவான் காசித்தலம் சென்று தனது பெயரால் ஒரு சிவலிங்கத்தை நிறுவி பூசை செய்து வழிபட்டதன் பயனாக கிரக அந்தஸ்தைப் பெற்றார்.

மேற்குத் திசைக்குரிய சனிபகவானின் வாகனம் காகம். இதன் காரணமாக "காகமேறும் தம்பிரான்" என்றும் இவர் அழைக்கப்பெறுகின்றார். இவருக்குரிய பத்திரம் வன்னி, மலர் கருங்குவளை, தானியம் எள், உலோகம் இரும்பு, சுவை கசப்பு, சனி தோஷமுடையோர் சனிக்கிழமை தோறும் வன்னிப் பத்திரத்தாலும் கருங்குவளை மலராலும் சனி பகவானை அர்ச்சித்து எள் எண்ணெய் தீபம் ஏற்றி, கோளறு பதிகம் பாடி பகவானைப் பிரீதிப்படுத்தி, அவன் இன்னருள் பெறவேண்டும். முயன்று பாருங்களேன்.

---

ஒருமுறை புத்தர் தன்னுடைய சீடர்களுடன் பயணப்பட்டுக்கொண்டிருந்தார். ஒரு ஏரியை எதிர்கொண்டபோது அங்கிருந்த பெரிய ஆலமர நிழலில் அனைவரும் சற்று ஓய்வெடுக்கும் எண்ணத்துடன் தங்கினார்கள். புத்தர் தன்னுடைய சீடர்களில் ஒருவரை அனுப்பி ஏரியில் இருந்து குடிப்பதற்கு நீர்கொண்டு வரச் சொன்னார். சீடரும் தங்களிடம் இருந்த பானை ஒன்றை எடுத்துக்கொண்டு நீர்நிலையை நோக்கி நடந்தார். அந்நேரத்தில் மாட்டு வண்டிக்காரர் ஒருவர், ஏரிக்குள் இறங்கி ஏரியைக் கடந்து சென்றார். ஏரி கலங்கிவிட்டது. அத்துடன் ஏரியின் கீழ்ப்பகுதியில் இருந்த சேறும் சகதியும் மேலே வந்து நீரை அசுத்தப்படுத்தி பார்ப்பதற்கே உபயோகமற்றதாகக் காட்சியளித்தது. இந்தக் கலங்கிய நீரை எப்படிக் குடிப்பதற்குப் பயன்படும்? இதை எப்படிக் குருவிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பது? என்று தண்ணீரில்லாமல் திரும்பிவிட்டார். அத்துடன் தன் குருவிடமும் அதைத் தெரிவித்தார்.

ஒருமணி நேரம் சென்ற பிறகு, புத்தர் தன்னுடைய சீடரை மீண்டும் ஏரிக்குச் சென்றுவரப் பணித்தார். நீர்நிலையருகே சென்று சீடன் பார்த்தான். இப்போது நீர் தெளிந்திருந்தது. சகதி நீரின் அடியிற்சென்று படிந்திருந்தது. ஒரு பானையில் தண்ணீரை முகர்ந்துகொண்டு சீடன் புத்தரிடம் திரும்பினான். புத்தர் தண்ணீரைப் பார்த்தார். சீடனையும் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் தண்ணீர் சுத்தமாவதற்கு என்ன செய்தாய்? என்றார். சீடன் நான் ஒன்றும் செய்யவில்லை சுவாமி. அதை அப்படியே விட்டுவிட்டு வந்தேன். அது தானாகவே சுத்தமாயிற்று. அத்துடன் உனக்குத் தெளிந்த நீரும் கிடைத்தது இல்லையா? ஆமாம் சுவாமி. நம் மனமும் அப்படிப்பட்டதுதான். மனம் குழப்பத்தில் இருக்கும்போது நாம் ஒன்றும் செய்யவேண்டாம். அதை அப்படியே விட்டுவிட வேண்டும். சிறிது கால அவகாசம் கொடுக்க வேண்டும். அது தனக்குத்தானே சரியாகிவிடும். நாம் எந்தவித முயற்சியும் செய்யவேண்டாம். மனதை சமாதானப்படுத்தும் வித்தைப்பற்றி சிந்திக்கவும் வேண்டாம். அது அமைதியாகிவிடும். அது தன்னிச்சையாக நடக்கும். அத்துடன் நம்முடைய முயற்சியின்றி அது நடக்கும். மன அமைதி என்பது இயலாத செயல் அல்ல! இயலும் செயலே....

*எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவிலை வரமாக்கிப் பேறாக்கிய ஸ்ரீமான் குமாரசாமிப் புலவரின் மகாமந்திரமே "கற்றாங்கு ஒழுகு"

*– திரு கே.எஸ். சிவஞானராஜா* அவர்கள் –

கொக்குவிலில் நூற்றாண்டு காலமாக ஒலித்துக்கொண்டிருக்கும் ஒரு மகாமந்திரம், கலைபயில் தரு சிறுவர்களையும் அவ்வூர் மக்களையும் சூரிய சந்திரர் இருக்கும்வரை வாழவைக்கும் என்பதில் யாவரும் நம்பிக்கை கொள்ளமுடியும். இது ஒரு சத்தியமானதும் சாத்தியமானதுமான திருவாக்காகும். அதுதான் "கற்றாங்கு ஒழுகு" என்பது. இதுதான் அந்த மகா மந்திரமாகும்.

அதாவது நீ கற்றவாறு அதன்படி நடப்பாயாக. வாழ்வாயாக. வெல்வாயாக. ஒழுகு வாயாக. மாறி நடக்காதே!

திருவள்ளுவரும், ஈரடிக்குறளால் நூறு வயதுவரை எல்லோரையும் நீடு வாழ வைக்கின்றார். அந்த மகா மந்திரத்தின் சற்று விளக்கமான திருக்குறள் இது. ஆம்!

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
(391)

கற்க! நிற்க கற்பவை ஐயந்திரிபரக் கற்க. பழுதில்லாமல் கற்கவேண்டும். பிழையறக் கற்று அதன்படி ஒழுக வேண்டும். கற்று ஒழுகாவிட்டால் வாழ்க்கை பூச்சியமாகிவிடும்.

மகாகவி பாரதியாரும் புதிய ஆத்திசூடியில் 13ஆவது வார்ப்பாகக் "கற்றது ஒழுகு" என்று காப்பிடுகின்றார். அதனால் ஒவ்வொருவரும் கற்கவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். எத்தொழில் புரிவோருக்கும் கல்வி அவசியம்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர்! முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்!!
(393)

பட்டத்திற்கும் பதவிக்கும் பணத்திற்கும் பாராளவேண்டுமென்ற பேராசைக்கும், போர் செய்வதற்கு ஏற்ற வியூகங்களுக்கும் பயன்படுமாறு படிப்பதல்ல கல்வி. மாறாக வாழ்வாங்கு வாழ்வதற்கே கல்வி பாலிக்க வேண்டும்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"
(400)

அதாவது ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வமானது கல்வியே ஆகும். மற்றையவை எல்லாம் செல்வங்களாகாது.

*பிழையை எங்கு கண்டாலும் அதை உன்னிடம் இருந்தால் திருத்திக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியானது வர்த்தகப் பொருளல்ல! அது காலமெல்லாம் சமூகம் வாழ்வற்கான அரும் பெரும் கருந்தனமாகும். இவற்றை மக்களின்பால் உணர்த்தும் வகையில், இவை அனைத்தையும் நன்குணர்ந்த, கல்விப்பெருஞ்செல்வமாம் பெருந்தகை ஸ்ரீமான் த. குமார சாமி அவர்களின் இதயத்திலே இறைவன் குடிபுகத் திருவுளம் கொண்டான். இது எப்பவோ முடிந்த காரியமாக, ஆரும் விரும்பும் அழகும், தேருந்தோறும் இனிமையும், ஊரும் பணியும் பக்தியும், பாரும் விசும்பும் சேருமே சித்தியும் ஒருங்கே அமையவே 1895.08.17 ஆம் திகதி திருவாதிரை நட்சத்திரத்திலே, தம்பையாப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் தவப் பேறினால் மஞ்சவனப்பதி முருகனின் மணி ஒலிக்க, மணியர்பதி முருகனின் மந்திரம் தாம் ஒலிக்க, ஐயனார் ஆலய சித்திவிநாயக ஷேத்திர மகிமையே அன்னப்பிள்ளைக்கு முத்துப் பிள்ளையாக காலமும் நேரமும் வானமும் மாரியென உபகரிக்க தெய்வக்குழந்தையானார் கொக்குவில் ஸ்ரீமான் குமாரசாமிப் புலவர் அவர்கள்.

நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக, சைவாசார தமிழ் மணம் கமழ, பெற்றோரிடத்தே நீதி நூல்களை செவிவழி மனனரூபமாகக் கேட்டுத் தெரிவதில் வல்லவரானார்.

அவ்வேளையிலே, சமய தமிழ் பற்றாளர்கள், பெரியார்கள்,

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 - 1879)
சி.வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901)
சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (1855 - 1922)

மூவரினதும் சைவசமய, தமிழ்த் தொண்டுகள் பற்றியும், மேலைநாட்டவர்களின் ஆதிக்கத்தினால் இந்த மண்பட்ட வேதனைபற்றியும் நாம் உண்மையான இந்து வாழவேண்டிய அவசியம் பற்றியும் புலவரின் பெற்றோர்கள் உணர்ந்தமையால், புலவரிடத்து முப்போதும் சிவமயமாகவே வரமாக்கப்பட்டது. ஆங்கில மோகத்தாலும் பதவி ஆசையாலும் சிவபெருமானை மறந்த மனிதரை எண்ணி பெற்றோர் வருந்தினர். எல்லாம் வல்ல பரம்பொருளாம் சிவபெரு மானை மறத்தலாகாது என்பதைப் பெற்றோர்கள் சிவலிங்கமாகவே தினமும் வழிபட்டு உணவருந்தினர். புலவரும் பஞ்சாட்சர மந்திர உபாசகரானார்.

ஆன்மீக ஒளி குடும்பத்தில் பிரகாசிக்கவேண்டுமாயின் தியானம் பாராயணம் வழிபாடு விரதம் அவசியமாகும்.

புலவரின் பெற்றோர்களும் நாவலர் மொழிந்ததுபோல அத்தனை ஆசாரசீல ஒழுக்கங் களையும் முறையாக அனுட்டித்தனர். புலவரும் அன்னை தந்தை சொற்படி மறுக்காமல் பின்பற்றினார்.

புலவரின் வீட்டில் ஒவ்வொரு செவ்வாயும் வெள்ளியும் சிவபுராணம் ஓதப்படும். அதேபோல திங்கள் புதன் சனி ஞாயிறு தினங்களில் மாலைவேளை திருநீற்றுப் பதிகமும், கோளறு பதிகமும் முழுமையாகப் பாடியபின்னர், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் வாழ்த்து என ஒரு சீராகவும் நேர்த்தியாகவும் ஓதப்பட்டு தீப தூப தீபம் காட்டுவர். புலவர் அவர்கள் சுமார் அறுபது வருடகாலம் திருமுறை ஓதுவதை தமது மேலான பணியாகக் கொண்டமை கொக்குவில் மக்களால் பதிவிடப்படுகிறது.

*நாளை என்பது கனவைப் போன்றது. இன்றைய நிஜத்தை ரசித்திடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் குமாரசாமிப்பிள்ளை அவர்கள் இவரின் புலமையையும் அறிவினையும் ஆற்றலையும் கண்டு குருவுபதேசம், ஞானவுபதேசம் இலக்கண இலக்கியவுபதேசம், வடமொழி உபதேச விருத்தியூட்டுபவராய்ப் புலவருக்கு தாமும், தமது மணாக்கருமாகத் தம்முன்னிருத்திப் பாடங் கற்பித்தனர். புலவர் அவர்களும் வேட்டி சால்வை உடுப்பவராய் சப்பாணிகட்டி குரு பாதம் தொட்டு வணங்குபவராய், சிவசின்னவாலாயம் மிக்கவராய் விளங்கியமையால் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், நல்வழி, மூதுரை, நன்னெறி, உலகநீதி, சாணக்கிய நீதி வெண்பா, சிவதோத்திரம், மகாபாரதம், இராமாயணம், தமிழ்ப்புலவர் சரித்திரம், ஆலயங்கள் தொடர்பாக ஆழ்ந்த அறிவு கொண்டார்.

இவ்வேளையில் போர்த்துக்கேய ஒல்லாந்த ஆங்கிலேய நாட்டவர்களின் வருகையால் ஏற்பட்ட மாற்றங்கள் பாதிப்புக்கள் பற்றி யாழ்ப்பாண மக்கள் வேதனை கொண்ட பாங்கினை உணர்ந்தவராய் சின்னஞ்சிறு வயதிலே அதற்கேற்ற உரிய பரிகாரம் தேடும் சிந்தையும் விந்தையும் கொண்டார். அவரது அடி மனதில் சைவசமயம், தமிழ் பேறாக்கப்பட வேண்டும் என்ற அவாவும் ஆறுதலும் வேரூன்றிய நிலையில் 17ஆம் நூற்றாண்டிலே திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாச சுவாமி அவர்கள் ஆட்சியாளர்களாக இருந்த வெளிநாட்டவர்களுக்கு வரியாகப் பசுமாடு உண்பதற்காகக் கொடுக்கவேண்டிய தேவையும் நேரமும் கட்டளையும் ஏற்பட்டபோது, அதற்குப் பயந்தவராய் இரவோடிரவாகச் சொல்லாமல் கொள்ளாமல் கடல்மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றுவிட்ட செய்தியும், பசு தப்பிய வரலாறும் புலவர் அவர்களுக்குப் படம்போல் பதிந்தது. திண்ணைப்பள்ளியில் குருசீட பாரம்பரிய முறைப்படி கற்ற புலவரை பெற்றோர்களும் மற்றும் படித்த பண்டிதர்களுமாகச் சேர்ந்து மேலும் கற்பதற்காக இந்தியாவின் புகழ்பெற்ற திருவாவடுதுறை ஆதீனத்தில் கற்பதற்கு வழிகாட்டி ஒழுங்கும் செய்தனர்.

இதற்கிடையில், தாயாரான அன்னப்பிள்ளையாம் முத்துப்பிள்ளை அம்மா அவர்கள் காதோடு காதாக வாயோடு வாயாக உலகநாதன் இயற்றிய உலகநீதிப் பாடல்களை அடிக்கடி பாடியும், மனனமாகச் சொல்லியும் கொடுத்த பேறினால் அந்தநேரம் அவை உச்சமாக நாட்டிலும் நாடு கடந்தும் கைகொடுத்தது.

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடிணங்க வேண்டாம்

இவ்வாறு 10 பாடல்களையும் இராகத்தோடு அழகாகப் பாடுவதில் புலவர் வல்லவ ரானார். இந்தியா வரையும் இவரது புலமை பேசுபொருள் ஆகியது.

அதேபோல நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் அற்புதமான பாடலான "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடலால் புலவர் மெய்சிலிர்த்தார் என்பது எல்லோருக்கும் அதிசயமானது.

*எதிர்ப்பவரிடம் துணிந்து நில். மதிப்பவரிடம் பணிந்து செல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை

ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!" என்ற தேன் சொட்டிய பாடலால் கொக்குவிலும் இனித்தது.

"கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்

கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே.

இந்தப் பாடலுக்கு கைகொட்டிப்பாடி கும்மிபோல் ஆடிப்பாடுவதில் புலவர் பலே கெட்டிக்காரர். இவரால்தான் இப்பாடல் அம்பலத்துக்கு வந்தாற்போல ஆடிப்பிறப்பு வரமுதலே கொக்குவிலில் மக்கள் புலவரை மொய்த்துப் பாடலைப் பாடுமாறு கெஞ்சி நிற்பர்.

மாதகல் ஏரம்பையர் (1847 - 1914) என்ற ஜோதிட, இலக்கண, இலக்கிய, வடமொழி தெரிந்த புலவரிடம், குமாரசாமிப் புலவரின் பிறந்த (1904) சாதகத்தைக் காட்டிப் பெற்றோர் பலனறிந்தபோது, அவர் கூறியது, பெற்றோருக்கு வாழ்வு தந்ததெனலாம். "இந்த ஜாதகர் மிகவும் பிரபல்யமாக வலம் வருவார்; சமயத்திலும் மொழியிலும் வல்லவராவார்; கல்வி கேள்விகளில் பேரும் புகழும் பெற்றிடுவார்; வாய் திறந்தால் சங்கீதம் இனிக்கும்; கையெடுக்கக் கற்கண்டாய் தமிழுதிரும்; பிறமொழியிலும் பேறு கொள்வார்; உடம்பெல்லாம் சிவமயமாகும்படி தவம் பெருக்குவார். இதுமட்டுமல்ல கடல் கடந்து கலைபெருக்கி மலைபோல் மாலை சுமக்க இந்த மண் மிதிப்பார்" என மொழிந்து ஏரம்பையர் பலன் கூறினார். ஆயுளும் கெட்டி என்பதனால் புலவரை இந்தியாவில் கல்வி கலை கலாசார பண்பாடு இலக்கண இலக்கிய காப்பியம் சொல்லவல்ல முதன்மை ஆதீனமான திருவாவடுதுறை ஆதீனத்திற்கு அனுப்பி படிக்க வைப்பதற்கு பெற்றோரும் மற்றோரும் ஆவனபுரிந்தனர்.

யாழ்ப்பாணம் ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வாசஸ்தலமாகவும் உடைய முருகேசு பண்டிதரின் மாணவனுமான சரவணமுத்துப்பிள்ளைப் பண்டிதர் அவர்களின் பாடல்களைப் புலவர் அவர்கள் சிறுவயதிலேயே ஞாபகமூட்டுமாறு கற்றிருந்தார். இதனைச் சரவணமுத்துப்பிள்ளை (1848 - 1916) அவர்கள் பேறாக்கிப் பொதுவாக்கினார். புலவரும்

தேனோ கனியோவெனவே
சுவைக்குஞ் செழுந்தமிழில்
தானே தனக்கிணையாகி
யுதித்துயர் சற்குருவாய்
வானோர் புகழ்நல்லை வந்தரு
நாவலன் வண்புகழை
நானோ சொல வல்லன்
சேடனுங் கூறிட நாணுவனே.

கற்றார் புகழ் சைவ சித்தாந்தப்
பாலின் கடல் கடந்து
மற்றார் நினைக்கருஞ் சைவப்
பிரகாசன மாவமிழ்தை

*புகழ்ந்தால் மயங்காதே...... இகழ்ந்தால் தளராதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்றாரணிச் சைவ நற்புலவோர்க்கு
நயந்தளித்தான்
வற்றாவறிவுடைச் சங்கர
பண்டித மாதவனே.

அந்த சின்ன வயதிலே படித்ததை மனத்தில் இருத்தியவராய் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஒப்புவித்தபோது, திருவாவடுதுறை ஆதீனத்தில் ஏற்கனவே வித்துவானாக இருந்த யாழ்ப்பாணம் கோப்பாய் சபாபதி நாவலர் (1843 - 1903) பற்றிய பாரத இராமாயண தாற்பரிய சங்கிரகங்களைச் சொல்லும் வல்லமையைக் கொண்டிருந்தார். திருவாவடுதுறை ஆதீனத்தில் குமாரசாமிப்புலவர் அவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்திலும், ஆச்சாபுரம் தேவாரப் பண்ணிசை பாடசாலையில் 1910ஆம் ஆண்டிலிருந்து 1915வரை ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து தேவாரப் பண்ணிசையை நேர்த்தியாகக் கற்றார்.

1916ஆம் ஆண்டிலும், 1917ஆம் ஆண்டிலும் தருமபுர ஆதீனத்தில் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் தேர்ச்சி பெற்றவராய், இசையிலும் மாட்சி கொண்டார்.

இந்நிலையில் இந்தியா மலேசியா இலங்கையிலும் பண்ணிசை நிகழ்வினைப் பக்தி சொட்டும்படியாக நடாத்தி சைவத்தையும் தமிழையும் மெச்சும்படி பாதுகாத்து வளர்த்தார்.

ஆங்கில மோகமும், மத நாட்டமும், பதவி வேண்டியும் மக்கள் தளம்பிய கால கட்டத்தில் சைவத்தையும் தமிழையும் பேறாக்க எண்ணிய புலவர் குமாரசாமி ஐயா அவர்கள், கொக்குவிலில் அவசிய அவசரமாக ஒரு கல்விக்கூடமதை நிறுவவேண்டுமென்ற தேவையை உணர்ந்தார். இதற்கு முன்னோடியாக இரவுநேர ஒரு சின்னப்பள்ளியை ஆரம்பித்து கொக்குவில் வாழ் உழைப்பாளிகளின் சிறார்களை ஒன்றுதிரட்டி தமிழ் சைவ சமயம், மனனம், உறுப்பெழுத்து, நீதிநூல் பாடல்கள், தேவாரம் என்றவாறு பாடசாலை வித்தியா பீடத்தை ஆரம்பித்தார். ஒரு சின்னஞ்சிறிய கொட்டிலில் காலப்போக்கில் பகலிலும் போதனை நடாத்தவேண்டிய தேவைக்குப் பொறுப்பானார் புலவர் அவர்கள் தமிழோடிசை பாடலால், பண்ணோடிசை பாடலால், ஆலய உபந்நியாச கதாப்பிரசங்க புராணபடிப்பின் இயன்ற வருமானங்களால் பகல்நேர பாடசாலைக்கு ஏராளமான, சின்னஞ்சிறு பாலகர்களும், பிள்ளைகளும், வயது வந்த இளைஞர்களும், அறிவுப்பசிகொண்ட வளர்ந்தோருமாகச் சிறியதொரு ஓலைக் கொட்டிலில் நிறைந்தமையால் பள்ளி நீட்சிபெறப் புலவருக்கு ஊக்கமும் வாய்ப்பும் கிடைத்தது.

(தொடரும்....

துறவு என்பது வீடு, வாசல், மனைவி, மக்கள் இவர்களை விட்டுவிட்டு காட்டிற்குச் சென்று மூக்கைப் பிடித்து மூச்சை அடக்குவது என்று அர்த்தமில்லை. உன் வீட்டிலேயே நீ இரு! உன் கடமைகளை ஒழுங்காகச் செய்! உன் வீட்டிலிருப்பவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்! இப்படிச் செய்வதன்மூலம் உன் இதயத்தை தூய்மையாக்கி உன்னதமான வாழ்க்கை நடத்த முடியும்! இதுவே உண்மையான "வைராக்கியம்" என்கின்ற துறவுநிலை. பொருட்களை உதறுவது துறவல்ல! ஆசைகளை உதறுவதுதான் துறவு! இவை எல்லாம் சேவையின்மூலம் நமக்குக் கிடைக்கின்றன.

*சிரித்துக்கொண்டே இரு...... வலிகள்கூட விலகிச் செல்லும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமசிவாய மந்திரத்தின் மகிமை

– *திருமதி பொ. திலகவதி* அவர்கள் –

விண்வெளியில் பரவி நிற்கும் சப்த அலைகள்தான் மந்திரங்களிற்கு மூலமாக அமைந்தவை. அந்த சப்த அலைகளில் இருந்து ஓசையை அறிந்த ரிஷிகள் அதில் இருந்து மந்திரங்களை கிரகித்துக் கொடுத்தார்கள். மந்திரங்கள் யாராலும் எழுதிவைக்கப் படவில்லை. மகரிஷிகளுடைய புனிதமான மனது கிரகித்து உருவாக்கிக்கொடுத்த அற்புதம் தான் மந்திரங்கள்.

மனித மனம் இறைவனைத் துதித்து உருவாக்கிக் கூறும் வார்த்தைகளே மந்திரங்கள். மனதால் நினைப்பதாலே நினைப்பவரை அனைத்து இன்னல்களில் இருந்தும் காப்பாற்றும் மந்திரமாகும். நமது வேதங்களும் சாஸ்திரங்களும் ஏராளமான மந்திரங்களும் மிக அருமை யான அர்த்தங்களோடும் புதைந்து கிடக்கின்றன.

மந்திரங்கள் ஓத தூய்மையான மனம் வேண்டும். நம் இல்லத்தில் ஏற்றிவைக்கும் விளக்கு புற இருளைத் தவிர்க்கும். அருள் நிறைந்த உள்ளத்தில் விளக்காக நின்று திரு வருளை ஒளிப்பிளம்பாக காட்டுவது மந்திரங்கள். மந்திரங்கள் ஓதுவதற்கு தூய பக்தி வேண்டும். பக்தன் ஒரு நொடிப்பொழுதும் வீண் போக்காது பக்தியில் ஈடுபட்டு மந்திரங்கள் ஓத வேண்டும்.

மனம் ஓர் நீர்நிலை போன்றது. இந்த நீர்நிலையில் கல் போட்டால் அலைகள் உண்டாகும். இந்த அலைகளால் நமது விம்பம் தண்ணீரில் தெரிவதில்லை. அது நீர்ப்பரப்பு அமைதியாக இருந்தால் பிம்பம் நன்றாக தெரியும். மனம் என்னும் நீர்நிலையில் எண்ணங்கள் என்னும் கற்களைப் போட்டால் உள்ளே சிவம் தெரியாது. மனமும் அசையாமல் தூய்மையாக இருந்தால் சிவம் தெரியும். தூய்மையான பக்தி வேண்டும். கற்கண்டில் எந்தப் பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது கற்கண்டே. அங்ஙனம் பக்தர்களது சொரூபம் முழுதும் பக்தி மயமே. வேறு எதையும் அங்கு காணமுடியாது.

பக்தர்களுக்கிடையில் ஜாதி, கல்வி, உடல் அமைப்பு, குலம், செல்வம், தொழில் முதலியவைகளை முன்னிட்டு பேதம் இல்லை. நம்மாழ்வார், நந்தனார் முதலியவர்கள் ஜாதியில் கீழோர் துருவன் கோபிமா முதலியவர்கள் கல்வி கற்றவர்கள் அல்லர். கண்ணப்பருக்கு கல்வியும் இல்லை. தொழிலும் கீழோர். ஆஞ்சநேயர், சபரி முதலியவர்கள் பலம் உள்ளவர்கள். விதுரர், சுதாமர் முதலியவர்க்கு செல்வமில்லை. நிஷாதர், சதனர் குலம் இல்லை. ஆயினும் இவர்கள் போன்றவர்கள் பரமபக்தர்களாக கருதப்படுகின்றனர்.

மந்திரங்களில் பல உண்டு. அவைகளில் சிறந்த மந்திரம் நமசிவாய மந்திரம். நமசிவாய மந்திரமே திருமேனியாக உடையவர் எம்பெருமான். இது மகா மந்திரம். இம் மந்திரத்தை தவிர வேறு உயர்ந்த மந்திரமில்லை. இதுவே ஆதி மந்திரம். அன்பெனும் நீர் பெருக்கி பக்தியை வளர்க்க வேண்டும். அதற்கு துணை ஏதும் கிடைக்கப்பெறாத மக்கள்

*தேவைப்படும்போது தேடப்படுவாய். அதுவரை அமைதியாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கிறார்கள். துன்பம் என்னும் பேரலை வந்து மோதுகிறது. ஆசை என்னும் சுறாமீன் பக்திசெய்ய முடியாமல் விழுங்க வருகிறது. இனி உய்யும் வகை யாது என்று பலவாறு எண்ண அந்த நெருக்கடியில் நமசிவாய மந்திரம் இறைவன் அருளால் கிடைக்கிறது. தினமும் நமசிவாய மந்திரத்தை நினைத்து சொல்வோமானால் எம்மை அறியாமலே எமது மனம் அதைச் சொல்ல ஆரம்பித்துவிடும்.

பகலிலும் இரவிலும் தூங்கும்போதும் மனம் சொல்லும் நமசிவாய மந்திரத்தை சொல்லி வந்தால் இறைவன் தானாகவே வந்து எம் மனதில் குடிகொண்டு விடுவார். நமசிவாய மந்திரம் என்பது வெறும் வாய்ச்சொல் அல்ல. அது எண்ணங்களை வலுப்படுத்தும் வீரியம் கொண்டது. ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க அதன் வீரியம் வலுப்படும். நமசிவாய என்று சொல்லுவது மிக எளிது. யாருக்கும் இயலும் எல்லார்க்கும் பொது. நாமத்தை வாய்விட்டுச் சொல்வது ஸ்தூல ஜபம். அதற்கு வலிவு சாமானியமானது. நா அசைவதற் கிடையில் சொல் வெளியில் கேட்பதில்லை. அத்தகையது சூஷ்ம ஜபம். அதற்கு வலிவு இன்றும் அதிகம். நாவும் அசையாமல் மனதுக்குள்ளேயே நாமத்தை சொல்லிக்கொண்டு இருப்பது அதி உச்சநிலை. அதற்கு வலிவு மிக உண்டு ஜபசித்தி எனப்படும்.

சைவ சமய ஆசிரியர்கள் நால்வருள் ஞானசம்பந்தர் மகவு தந்தையிடம் வைக்கும் வாத்சல்ய பாவனை. அப்பா அநுஷ்டித்தது ஆண்டான் அடிமை முறை. சுந்தரர் பாவனையில் தோழமை முறை காட்டினது. மாணிக்கவாசகரிடம் தென்படுவது நாயகன் நாயகி இணக்கம். "வந்த கூற்ற அஞ்ச உதைத்த" சம்பந்தர் கூறுகிறார். திருநாவுக்கரசர் சொல்கிறார் "கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்று அப்பர் கூறுகிறார். கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கரை ஊரில் பாண்டிக்கொடுமுடி நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே சுந்தரமூர்த்தி நாயனார். நான் ஏதோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் என்கிறார் மாணிக்கவாசகர். இப்படியாக நாயன்மார்கள் நமசிவாய மந்திரத்தின் மகிமையை நமக்குக் காட்டினார்கள்.

ரோமஞ் சிலிர்த்துள நெக்கு நெக்கு எனக் கசிந்தே உருகி நமசிவாய மந்திரம் பக்தியோடு ஓதவேண்டும். மாருத் தியான முந்து ஆனந்த மேற்கொண்டு மார்பில் கண்ணீர் ஆறாய் பெருக நமசிவாய மந்திரத்தை ஓத வேண்டும். மனதில் சிறிதும் ஐயம் இன்றி நம்பிக்கையோடு நமசிவாய மந்திரம் ஓதினால் அடியவர்களின் துன்பங்கள், ஊழ்வினைகள், நவக்கிரகங்களின் தோஷங்கள் யாவும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் அருளால் விலகும். இன்பமாக வாழலாம்.

*மனிதனுள் அடங்கியிருக்கும் சக்தி மகத்துவமானது! எவ்வகையிலும் ஒப்பிட முடியாதது! பார்வைக்கு புலப்படவில்லை எனினும், அந்த சக்தி அளவற்றது. சரியான நேரத்தில் அது வெளிப்படுகின்றது. நீ வெற்றிகொள்வதெல்லாம் உன்னுள் அடங்கியிருக்கும் சக்தியினால் அன்றி வேறில்லை. கடவுள் சர்வ வல்லமை பொருந்தியவர்தான். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். ஆனால் அத்தகைய சக்தி பக்தர்களிடமும் கூட காணப்படுகிறது.*

***வானிலையைவிட அதிவேகமாய் மாறுகிறது மனிதனின் மனநிலை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| மா. துரைராஜா<br>T. துஷ்யந்தன்<br>T. சசிகரன் | அல்வாய் | 15000. 00 |
| சு. பவளமலர் | புத்தூர் | 10000. 00 |
| திருமதி சிவசம்பு | கொழும்பு | 3000. 00 |
| S. சுதாரணி | அச்சுவேலி | 5000. 00 |
| ந. குணபாலன் | மானிப்பாய் | 1மூடை அரிசி |
| செ. ஜெகநாதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ரஞ்சீவன் ஹேவதி | அச்சுவேலி | 5000. 00 |
| ச. தனேஷன் | சுதுமலை | 5000. 00 |
| K. உதயசாந்தி | மன்னார் | 500. 00 |
| S. அபிஷன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| த. வைஸ்ணவி, த. இலக்கியா | சுவிஸ் | 5000. 00 |
| தி. திருஞானதீபன் | சுவினை | 1500. 00 |
| நல்லையா தவமணி | அச்சுவேலி | 5000. 00 |
| S. கோகுலன் | கொற்றாவத்தை | 2000. 00 |
| தி. சாய்சரன் | மயிலிட்டித்துறை | 10000. 00 |
| திரு பாலசுப்பிரமணியம் | கோப்பாய் | 1000. 00 |
| து. லோகவர்ஷன் | இணுவில் | 1000. 00 |
| து. திஷான் | இணுவில் | 1000. 00 |
| K. ஸ்ரீனியாகரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வை. சண்முகப்பிரியா | பொலிகண்டி | 8000. 00 |
| பா. கந்தசாமி | கரவெட்டி | 1000. 00 |
| க. தர்மலிங்கம் J.P. | நீர்வேலி | 1000. 00 |
| த. தேவலக்சுமி குடும்பம் | வதிரி | 30000. 00 |
| சி. சதீஸ்குமார் | கோண்டாவில் | 5000. 00 |
| ஜெ. பார்த்தீபன் | உரும்பராய் | 10000. 00 |
| செ. கவிதா (வல்வெட்டி) | லண்டன் | 15000. 00 |

*மனித வாழ்வில் தேடலும், தேவையும் தீர்வதேயில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அமரர் சச்சிதானந்தம் நினைவாக | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| சுப்பிரமணியம் தவராசா | வதிரி | 5000. 00 |
| அ. அருள்நாதன் | இணுவில் | 2000. 00 |
| சு. சுவீதினி | பிரான்ஸ் (இளவாலை) | 10000. 00 |
| சி. ஜீவா | இணுவில் | 2000. 00 |
| இ. சாந்தசொரூபன் | கனடா | 10000. 00 |
| அமரர் நிர்மலேஸ்வரன் நினைவாக | பத்தமேனி | 1000. 00 |
| சி. சுமந்தன் | மட்டுவில்தெற்கு | 5000. 00 |
| சு. மனோன்மணி | கந்தர்மடம் | 5000. 00 |
| பாக்கியலெட்சுமி மூலம் கந்தையா நினைவாக | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| மகான் விஜயபாலன் | நெல்லியடி | 8000. 00 |
| திரு மகாலிங்கம் குடும்பம் | ஏழாலை | 2000. 00 |
| லோ. தனுஷ் | ஆவரங்கால் | 1000. 00 |
| வே. கேஷா | கரவெட்டி | 5000. 00 |
| திரு புஷ்பராஜா குடும்பம் | உரும்பராய் | 1000. 00 |
| J. செந்தூரன் | கொழும்பு - 12 | 1000. 00 |
| மோகன்மதி குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| இ. இதயரூபன் | தெகிவளை | 10000. 00 |
| ப. அஸ்வினியா | கதிரிப்பாய் | 2000. 00 |
| இ. ராகுலன் | புத்தூர் | 2000. 00 |
| ந. தெய்வேந்திரம் | வல்வெட்டி | 3000. 00 |
| சி. ஞானசுந்தரம் | அச்சுவேலி | 5000. 00 |
| Dr இ. டினுஷன் | உரும்பராய் | 50000. 00 |
| மு. அஷ்வினி | கனடா (இணுவில்) | 20000. 00 |
| திரு இராசையா குடும்பம் | கனடா (இணுவில்) | 30000. 00 |
| த. ஆரண்யா | கரணவாய் (முதியோர்களுக்காக) | 10000. 00 |
| சி. நாகேஸ்வரி நினைவாக | வவுனியா | 30000. 00 |
| பத்மநாதன் நிர்மலன் | கனடா | 10000. 00 |
| ஜெ. தாரணி | கனடா | 4000. 00 |
| பா. குகன் | பருத்தித்துறை | 8000. 00 |
| அ. குகப்பிரியன் | கொக்குவில் | 1000. 00 |
| திருமதி விஸ்வமூர்த்தி | கோண்டாவில் | 2000. 00 |
| வி. விருஷாளினி | பிரான்ஸ் | 10000. 00 |
| ப. குமரன் | அச்சுவேலி | 5000. 00 |
| வ. மகிலன் | கனடா (பருத்தித்துறை) | 10000. 00 |
| பொன். சற்குணநாதன் | உரும்பராய் தெற்கு மரக்கறி, 1புட்டி அரிசி | 1500. 00 |
| த. தியாஸ் | மயிலங்காடு அரிசி | 1000. 00 |
| சி. காந்தரூபன் | இருபாலை | 2500. 00 |

*உங்களை நீங்களே மதியுங்கள். அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| J. சங்கீதா | நவாலி | 2000. 00 |
| S. துஷ்யந்தன் | திருகோணமலை | 1000. 00 |
| தி. கோபாலகிருஷ்ணன் | புத்தூர் | 1000. 00 |
| உ. விதுஷா | கனடா | 4000. 00 |
| யோ. சக்திவேல் | கனடா (மூளாய்) | 5000. 00 |
| S. எழில்வதனி | சுழிபுரம் | 5000. 00 |
| S. பாலச்சந்திரன் | நீர்வேலி | 3புட்டி அரிசி |
| ஜெ. வினோஜா | நீர்வேலி | 2000. 00 |
| S. தவலிங்கம் | நீர்வேலி | 1000. 00 |
| இ. அச்சுதன் | நீர்வேலி | 1000. 00 |
| க. பிரியேந்திரன் | நல்லூர் | 2000. 00 |
| முருகன் அடியார் | கந்தர்மடம் | 2000. 00 |
| தரணியா தயாளன் | கந்தர்மடம் | 500. 00 |
| திரு பெரியசாமி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வி. தருந்து | வவுனியா | 1000. 00 |
| அ. திவாஜினி | உரும்பராய் | 2000. 00 |
| க. பகீரதன் | கரணவாய் | 10000. 00 |
| ரட்ணேஸ்வரன் அஸ்விதன் | யாழ்ப்பாணம் (பிரான்ஸ்) | 128500. 00 |
| ம. சுரேந்திரன் | திருநெல்வேலி (கற்றல் உதவி) | 10000. 00 |
| மல்லிகாதேவி குடும்பம் | குப்பிளான் | 3000. 00 |
| K. சாருஜன் | சாவகச்சேரி | 5500. 00 |
| S. கோகுலன் | கொற்றாவத்தை | 2000. 00 |
| T. வாகீசன் | பருத்தித்துறை | 10000. 00 |
| சிவதேவி | அம்பாறை | 2000. 00 |
| ம. அபிமன்யு | திருநெல்வேலி | 5000. 00 |
| சி. நாகலிங்கம் | புலோலி | 5000. 00 |
| ந. நாகநந்தினி | சுவிஸ் | 10000. 00 |
| செ. அரியானந்தம் | காங்கேசந்துறை | 10000. 00 |
| சு. நிமலன் | (ஜேர்மன்) சாவகச்சேரி | 20000. 00 |
| ரா. கஜானனன் | அளவெட்டி | 10000. 00 |
| செ. மங்களேஸ்வரி | அளவெட்டி | 1000. 00 |
| சி. சிவனேசன் | கனடா (அளவெட்டி) | 12000. 00 |
| திரு ரவீந்திரன் குடும்பம், திரு லோகேந்திரா | குடும்பம் (U.K.) ஊரெழு | 10000. 00 |
| செ. தேவநாயகி | உரும்பராய் | 500. 00 |
| சண்முகநாதன் சுப்பிரமணியம் | கனடா | 51000. 00 |
| வ. இராசம்மா | சுன்னாகம் | பருப்பு, 1புட்டி அரிசி |
| இந்திரா கபே | நெல்லியடி | 10000. 00 |
| த. ஜெகந்தன் | கரவெட்டி | 25000. 00 |

*குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வெறும் குப்பைமேடுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. சிவஞானமூர்த்தி | நவக்கிரி | 5000. 00 |
| தி. சத்தியா | மந்திகை | 2000. 00 |
| சு. செல்வரத்தினம் | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| நா. குணரெட்ணம் | புன்னாலைக்கட்டுவன் | 500. 00 |
| ஜெ. லோஜினி | உடுவில் | 5000. 00 |
| திரு ஜெயபாலசிங்கம் மூலம் சாரதாதேவி ராஜேந்திரன் | கனடா | 100000. 00 |
| இ. தவராசா, கு. கிரியா | இமையாணன் | 20000. 00 |
| சதுமுகன் அனுஜா | புலோலி | 10000. 00 |
| திரு அமிர்தநாதன் குடும்பம் | ஆவரங்கால் | 5000. 00 |
| க. சுகன்யா | கனடா | 5000. 00 |
| இ. கிருபாமூர்த்தி | வவுனியா | 5000. 00 |
| சே. ஸ்ரீகாந்திமதி | வவுனியா | 5000. 00 |
| பி. ஜீவகன் | மிருசுவில் | 1000. 00 |
| ஜெ. மயூரன் | அளவெட்டி | 1000. 00 |
| க. இராசநாயகம் | சங்கானை | 1000. 00 |
| அண்ணாமலை விமலா | உடுப்பிட்டி | 1மூடை அரிசி |
| பாஸ்கரன் இந்திராணி, பா. தானிகா, பா. தாமிரா | லண்டன் | 15000. 00 |
| திருமதி கமலாம்மா | தொல்புரம் | 5000. 00 |
| லோகேஸ்வரி | மானிப்பாய் | 5000. 00 |
| அ. திலீப்குமார் | வவுனியா | 5000. 00 |
| கே. காசினி | ஆவரங்கால் | 2000. 00 |
| R. விஜிதா | அச்சுவேலி | 11000. 00 |
| ஐ. மயூரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| T. சிவராசா | சுன்னாகம் | 1000. 00 |
| த. சந்தோஷ் | ஏழாலை | 2000. 00 |
| ம. சம்யுக்தா | லண்டன் | 1000. 00 |
| கி. விதுஷனா, கி. விதுரன் | பன்னாகம் | 2500. 00 |
| த. ஜெகஜீவன் | வவுனியா | 5000. 00 |
| ஸ்ரீ. அட்சயன் | நட்டாங்கண்டல் | 500. 00 |
| த. கமலாம்பிகை | வவுனியா | 1000. 00 |
| R. கணேசன், க. அருட்குமரன் | இணுவில் | 10000. 00 |
| இ. தேவமனோகரன் | மானிப்பாய் | 8500. 00 |
| ம. கன்ஷிகா | உடுப்பிட்டி | 2000. 00 |
| ச. திருநாதன் | அராலி | 5000. 00 |
| S. விஜயகுமார் | கோப்பாய் | 10000. 00 |
| S. சுரேந்திரரட்ணம் | கோப்பாய் | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் மருகா! பழநிமேவு முருகா! இந்த உடம்பை நம்பி அடியேன் இடருறா வண்ணம் அன்பு வைத்து ஆட்கொள்வாய்! ஈடேற அருள்புரிவாய்!

– **திரு க.கு.க. சிவபாலன்** அவர்கள் –

சீயுதிர மெங்கு மேயபுழுநி ரம்பு
மாயமல பிண்ட நோயிடுகு ரம்பை
தீநரிகள் கங்கு காகமிலை தின்ப தொழியாதே

தீதுளகு ணங்க ளேபெருகு தொந்த
மாயையில்வ ளர்ந்த தோல் தசையெ லும்பு
சேரிடுந ரம்பு தானிவைபொ திந்து நிலைகாணா

ஆயதுந மன்கை போக வுயிரந்த
நாழி கையில் விஞ்ச ஊசி - டும்பை
யாகியவு டம்பு பேணிநிலை யென்று மடவார் பால்

ஆசையை விரும்பு யேவிரக சிங்கி
தானுமிகு வந்து மேவிடம யங்கு
மாழ்துயர்வி ழுந்து மாளுமெனை யன்பு புரிவாயே

மாயைவல கஞ்ச னால்விடவெ குண்டு
பார்முழுது மண்ட கோளமுந டுங்க
வாய் பிளிறு நின்று மேகநிகர் தன்கை யதனாலே

வாரியுற அண்டி வீறொடுமு ழங்கு
நீரைநுகர் கின்ற கோடமொடே தீர்ந்த
வாரண இரண்டு கோடொடிய வென்றுற நெடியோனாம்

வேயினிசை கொண்டு கோநிரை புரந்து
மேயல்புரி செங்கண் மால் மருக துங்க
வேல்கிர வுஞ்ச மால் நரையிடிந்து பொடியாக

வேளை விடு கந்த காவிரிவி ளங்கு
கார்கலிசை வந்த சேவகன்வ ணங்கு
வீரைநகர் வந்து வாழ்பழநி யண்டர் பெருமாளே.

*வார்த்தைகளில் உண்மை இல்லையெனில் எண்ணங்களில் தூய்மை இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உடம்பு சீழ், இரத்தம், புழு, மலம் இவை நிரம்பியது, அருவருப்பானது. இந்த குடலில் (உடம்பில்) நிறைந்தவை பல நோய்கள்தான். இந்த உடம்பு நிலையில்லாதது. வானில் எறிந்த கல் நிலத்தில் விழும் அதுபோல் வினையால் எடுத்த இந்த உடம்பு வினைமுடிவில் விழுந்துவிடும்.

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலர்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில் கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கை கேஇரை யாகிக் கழிவரே.

-திருநாவுக்கரசர்.

கோயில் வழிபாடு முதலிய நற்கருமங்கள் ஒன்றையும் மேற்கொள்ளாது வேளைக்கு வேளை வயிறு புடைக்க உண்டு வளர்ந்த இப்புலால் உடம்பு, முடிவில் நெருப்புக்கும் நரிக்கும் கழுகுக்கும் ஏன் காக்கைக்கும் இரையாகிக் கழிகின்றது.

எரியெனக் கென்னும் புழுவோ எனக்கென்னும் இந்த மண்ணும்
சரியெனக் கென்னும் பருந்தோ எனக்கென்னும் தான் புசிக்கு
நரியெனக் கென்னும் புன்னாய் எனக் கெனுக இந் நாலுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால் என்ன பேறெனக்கே.

-பட்டினத்தார்.

இந்த உடம்பு உயிருள்ளவரை நன்றாக இருக்கும், உயிர் இயமன் கையில் சென்ற மறுகணமே இது அழுகி நாறி, கெட்டு அழியும். அந்தோ! என்ன மதியீனம்? இத்தகைய ஊன் உடலை வளர்ப்பதற்காக எத்தனை பொய்? எத்தனை சூது? எத்தனை வாது? எத்தனை களவு? எத்தனை வஞ்சனை? எத்தனை காலம் என்ன என்ன வகையில் பேணி வளர்த்து அழகு செய்த இந்த உடம்பு உயிர்போன அந்த நேரமே விகாரப்பட்டு வெறுக்கப்படுகின்றது. பாபமூடையைக் கட்டிக்கொண்டு உயிர் போகிறது.

இறைவனைத் தாங்கிநிற்கும் ஆலயமும் அவரை உணர்ந்துகொள்ள உதவும் பூசை ஆராதனா, மந்திரங்களும் எவ்வாறு உலகை வாழ வைக்கின்றதோ அதேபோன்றுதான் வாழும் இல்லங்களும், அங்கு தங்கும் தாய் தந்தையர்களும், உறவினர்களும் அவர்களூடே நடைபெறும் நற்செயல்களும் இறைவனது நாமங்களால் நாமகரணங்கள் உரியவர்களை அழைக்கும்போது அதனால் கொண்ட நாமார்ச்சனைகளும் மக்களை என்றும் இனிதே வாழவைத்து அதன்மூலம் உலகையே அவை ரட்சித்துநிற்கும் என்பதும் ஈசன் வாக்கே. இது எல்லாம் கந்தபுராணம் உலகிற்கு நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது.

ஒருவனின் பெயர்மூலம்தான் உயிர் சக்தி உய்வடையும். அப்பெயரை ஓயாது உச்சரிப்பதால் உடலிலும் ஏன்! சூழலிலும் மந்திரசக்தி ஊடுருவி மனதை மகிழ்விக்கும்.

சிவபிரான் உமை அம்மாவுக்கு சரவணப் பொய்கையில் தமது குமாரர்களைப் பார்த்து கூறுகையில்,

*பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது அன்பிற்கும் உரியதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈங்கன நமது கண்ணீ னெய்திய குமரன்
கங்கை தாங்கினன் கொண்டு சென்று
சரவணத் திடுலாலே காங்கேய னென ப்பேர் பெற்றான்
காமர்பூஞ் சரவணத்தில் பால்கரில் வருதலாலே
சரவணபவ னென்றானான்
தாயென வாரால் போந்து தனங்கொள்
பாலருந்தலாலே ஏயதோர் கார்த்திகேயன்
என்றொரு தொல் பேர் பெற்றான்
சேயவன் வடிவமாறுந் திரட்டீ நீ (உமை)
யொன்றாய்ச் செய்தாய் ஆயதனாலே
கந்தனாமென நாமம் பெற்றான்
ஆதலின்மது சக்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான்
சீரும் போதமு மழிவில் வீடும் போற்றினக் கருள வல்லான்

-கந்தபுராணம்.

உலகில் தாய் தந்தையர்கள், மக்கள் எவ்வாறு பணிகளை மேற்கொண்டனர். தம் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு எவ்வாறு பிள்ளைகட்கு நாமகரணஞ் செய்யவேண்டும். நாமங்களால் ஏற்படும் அருட்தன்மைகள் யாவை என்பன இந்தக் கந்தபுராணப் பாடல்கள் அறியத் தருகின்றன.

அனாதியான சைவசமய வாழ்வியல் வழிகாட்டலில் மானிடப்பிறவியின் நோக்கம், நலன் என்னவென்பதையும் இவற்றைப் பேணி நிற்க உதவும் மார்க்கங்களையும், பல்லாயிரக்கணக்கான நூல்கள் அறியத் தருகின்றன. இவற்றுள் கந்தபுராணம் சிறந்ததோர் வழிகாட்டி நூல் என்பது பல அறிஞர்களது கருத்தாகும். அழகுத் தெய்வமான முருகனுக்கு ஏராளமான விழாக்கள் பருவ காலங்களுக்கேற்றவாறு நடைபெறுகின்றன.

ஒவ்வொரு விழாவும் மனித சமுதாய மனங்கட்கு ஏற்றவகையில் கொண்டாடப்படுவதும் மரபுமாயிற்று. முன்னோர் மரபு வழியில் விழா நடாத்தி இறை அருள் பெறுவோம். இருப்பினும் அவ்வவ் விழாக்களில்கூட பண்டைய ஆகாரங்களோடு பெற்ற பேறுகளை நினைத்து தத்துவ உண்மைப் பொருட்களை உலகிற்கு விளங்கவைத்துக் கொண்டே தொடர்கின்றன.

எம்பெருமான் முருகனுக்குரிய விழாக்களில் "கந்தசஷ்டி விழா" தனித்ததோர் முக்கியத்துவம் கொண்டிருக்கின்றதென விஸ்வாமித்திர மகரிஷி உட்பட சகலரும் அறியத் தந்துள்ளனர். ஐப்பசி மாத சுக்கிர (வெள்ளிக்கிழமை) வாரங்கள் விரதமனுஷ்டிக்க ஏதுவான தென அமைந்துவிட்டது. இம் மாதத்தில் புனித நீராடி சுக்கிரவார விரதமனுஷ்டிப்பதால் உடல் உள ஆரோக்கியமும், நிறைகொண்ட ஞானங்கள் கைகூட அறிவு வளர்ச்சியும், முருகப்பெருமானது ஆராதனைகளால் ஆயுள்விருத்தி, தான்யம் தனம் புத்ரலாபம் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டப்படும் செல்வங்களைப் பெறமுடியுமென கந்தபுராணம் தரவுகள் தருகின்றன. இன்றைய சமுதாயத்துக்கு இது ஓர் வரப்பிரசாதம்.

பாரத நாட்டில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, காவேரி, சிந்து எனும் திவ்ய நதிகளிலும், சமுத்திரங்களிலும் மக்கள் தவறாது இம் மாதத்தில் நீராடி தத்தம் சித்திகளைப் பெறுவர். அதிகாலை வேளையில் இந் நீர் நிலைகளில் அமிர்தத்திற்கொப்பான ஔஷதமும் சேர்வதால் அந்நீர் அருந்துவதற்கும் உகந்ததென "அஷ்டாங்க சங்கிரதம்" நூல் அறியத்தருகிறது. இந்த நீர் வகையை "காங்கோதம்" எதற்கும் சிறந்தது எனவும், சமுத்திர நீர் ஐப்பசியில் மாத்திரமே உபயோகத்திற்கு உகந்ததெனவும் அறியத்தருகிறது. சமுத்திரராசன் முருகப்பெருமானை சமுத்திரத்திலிருந்தவாறே தரிசனம் செய்ய பேராசை கொண்டு துதித்து நின்றான்.

ஐப்பசி மாதத்தில்தான் சங்கு, சிப்பி, சோகி என்பன "விருத்தி" சிப்பிகளில் முத்து விளையும் மாதமும் ஐப்பசியே. இம் மாதத்தில் வரும் அமாவாசைகூட சக்திகொண்ட திதி ஆக தீபாவளியோடு சார்ந்து நிற்கும். அத்துடன் முருகப்பெருமானது ஸ்கந்தசஷ்டி விரதமும் தொடரும்.

நாம் விரதங்கள் மூலம் எமக்கு எதைப் பெறவேண்டும் என எமது இரு கரங்களாலும் துதித்து போற்றி வணங்கி நிற்க எம் முருகப்பெருமான் தமது பன்னிரண்டு கைகளாலும் எமது இரு கரங்களிலும் தமது திருவருட் செல்வங்களை வழங்குவார், வழங்கிக்கொண்டே இருப்பார் என அகஸ்திய முனிவர் உலகிற்கு விதந்தோதினர். "ஓம் முத்துக்குமார"

இப் பன்னிரு கரங்களின் செயற்பாடுகளை சங்கப்புலவர் நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் மிக அழகாக ஓதி வர்ணித்துவிட்டார். நாமும் ஆற்றுப்படை ஓதுவோம்.

துதிகளால் முருகனைப் போற்றி மனதில் சிந்தித்து, எமக்கு வேண்டிய செல்வங்களைப் பெறவே இம் மாதத்தில் முருக வழிபாடு அதிசிறந்ததென சான்றோர் கண்டு அனுபவித்த முடிவு.

(தொடரும்...

## ஏழைகள் மனம் நாடும் சந்நிதிவேல்

சந்நிதி வேலை நான் மறப்பேனோ?
சஞ்சலம் இன்றித் தான் இருப்பேனோ?
எந்நிதியும் தரும் செல்வச் சந்நிதியான்
ஏழைகள் மனம் நாடும் சந்நிதி வேல்
அள்ளி வழங்குவான் அவன் அன்னதானம்
ஆற்றங்கரை வேலனின் தெய்வீக ஞானம்
புள்ளி மயில் முருகன் ஏறும் வாகனம் - திருப்
புகழ் அவன் விரும்பும் வேத மந்திரம்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*இருப்பதை இழக்காமல் இருக்க இழந்ததை மறந்துவிடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

*(தொடர்ச்சி...*

**– திரு இரா. செல்வவடிவேல்** அவர்கள் –

## 11) தந்தையையும் நாட்டையும் இழந்து தவித்த தையலர்

பண்டைத் தமிழகத்தின் வரலாற்று நூல்களை நுனிப்புல் மேய்ச்சலாக நோக்குவார்க்கும், அக்காலத் தமிழ் மக்களிடத்து கொடை, தாய்மொழிப்பற்று, மானம், வீரம் ஆகிய பண்புகளே தலைசிறந்து விளங்கியமை நன்கு புலனாகும். ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய அந் நான்கினுள்ளும் "கொடைமடம்" கொண்டு வள்ளல்களாக வாழ்ந்தோர் இந்நாட்டிற்போல வேறு எந்நாட்டிலும் இருந்திலர் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாம். கொடையிடத்து அறியாமைப்படுதலே கொடைமடம் ஆகும். எவர்க்கும் எப்பொழுது எதைக் கொடுக்கலாம் என்னும் வரையறை இல்லாது, எவர்க்கும் எப்பொழுதும் எதையும் ஈதலே வரையாதளிக்கும் வள்ளன்மை எனப்படும். அத்தகைய வள்ளன்மை உடையோரே வள்ளல்கள்.

"இளவேனிற்கால மாலைப்பொழுதில் உயர்தரப் புரவிகள் பூட்டிய தேரில், ஓர் அரசன் ஊருக்கு அருகில் உள்ள மலர்ப்பொழிலை நோக்கி உலாப்போய்க்கொண்டிருக்கிறான். எதிரில், சிறு செடியில் படர்ந்து ஏறிய முல்லைக் கொடியொன்று பற்றுக்கோடு இல்லாமையால் மேற்செல்ல இயலாது நெறிபால் குறுக்கே தாவி அலைந்துகொண்டிருக்கிறது. அதைக் கண்ட அந்த அரசன் உள்ளம் உருகியது. தன் தேரினை அதனருகில் செலுத்தி நிறுத்துகிறான். குதிரைகளைக் கட்டவிழ்த்துவிட்டு கொடியை மேலே எடுத்து அத்தேரின்மீது படரவிடுகிறான். மனக்களிப்புடன் கால் நடையாகவே அரண்மனை சேர்கிறான்.

இவ் வரலாறு நமக்கு நகைப்பைத்தான் விளைக்கிறது. "இ∴தென்ன மடமை! இப்படியும் ஒருவன் இருப்பானோ!" என்று இதனை நம்பவும் மறுக்கிறது நமது மனம். ஆம்; அவன் மனநிலை வேறு; நம் மனநிலை வேறு. "ஓர் உயிர் அலைகிறது, ஐயோ! கனிந்த இரக்க உள்ளத்தில் தோன்றுவது இதுதான். இதுதான் கொடைமடம். இவ்வாறு செய்தவன் யார்? அவன்தான் பாரி வள்ளல்.

வள்ளல்களைக் குறித்து நினைக்க நேருங்கால் அவர்கள் எண்ணிறந்தோராயினும் முதலில் எம் மனதில் இடம்பெறுபவன் வேள் பாரியேயாவான். சைவசமயப் பெரியோர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அதனையே குறிப்பிட்டு, "கொடுக்கிலாதானைப் பாரியே எனக் கூறினும் கொடுப்பாரிலை" எனப் புகழ்ந்துள்ளார். "வண் புகழ்ப்பாரி" என்றார் அருணகிரியாரும்.

பாரி ஓர் குறுநில மன்னன்; பாண்டிய நாட்டின் ஓர் பகுதியாகிய பறம்பு நாட்டுத் தலைவன். பறம்பு நாடு முந்நூறு ஊர்களையும், அவற்றின் தாப்பண் விண்மீன்களால் சூழப்பெற்ற திங்கள்போல ஒளிரும் பறம்பு மலையையும் கொண்டது. குறுநில மன்னனாயினும்

*புரியாத கவிதையும் கலையாத கனவும் அழகுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரில் பெருநில வேந்தரையும் புறங்காணும் ஆற்றல் மிக்க வீரன் பாரி. கல்வியிற் சிறந்தவன். தமிழ்ப்புலவரை ஆதரிக்கும் ஆவல் மிக்குடையவன். தமிழ் பேரறிஞராகிய கபிலரை ஆருயிர் நண்பராகக் கொண்டிருந்தவன். பாணர், விறலியர், புலவர் ஆயினோர்க்குத் தன் முந்நூறு ஊர்களையும் பரிசிலாகக் கொடுத்துவிட்டு எஞ்சிய பறம்பு மலையை மாத்திரம் தனக்குரியதாகக் கொண்டிருந்தான்.

இரு கண்மணிகள் போன்று இரு பெண் மணிகள் இருந்தனர் பாரிக்கு. அவனது ஆருயிர் நண்பனும் அவைப் புலவருமாகிய கபிலரே அம் மகளீர்க்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக இருந்தார். அடக்கம், அன்பு, பெரியோர் வழிபாடு, கல்வியில் ஆர்வம் முதலிய பண்புகள் நிறைந்த அப் பெண்மணிகள் தம் சிந்தையைப் பிறவிடயங்களில் சிதறிவிடாமல் ஆசிரியர் கற்பிப்பதில் ஊன்ற நிறுத்துதல், கற்பித்தபின் அவற்றைச் சிந்தித்தல், ஒருவரை ஒருவர் வினாதல், விடையிறுத்தல் ஐயம் நேர்ந்துழி ஆசிரியரை அடுத்துக் கேட்டல் முதலிய தலை மாணாக்கர்க்குரிய இயல்புகளுமுடையோராய், ஆசிரியர் கபிலர் இன்றியமையாத இலக்கண இலக்கியங்களையெல்லாம் முறைப்படி கற்பிக்க, விரைவில் கற்றுத் தேர்ச்சியுற்றனர். செய்யுள் யாத்தலிலும் நன்கு பயின்று வல்லராயினர்.

எழிலும் ஒழுக்கமும் ஒருங்கே கொண்டிருந்த அம் மகளிரை மணப்பருவமும் எய்தியது. பாரிமகளிரின் செவ்வியைச் செவியுற்ற தமிழ்நாட்டு மூவேந்தரும், அவர்களை மணக்க விரும்பித் தம் கருத்தைத் தனித்தனியாகப் பாரிக்குத் தெரிவித்தனர். பாரி அதற்கு உடன்பட்டிலன். ஆகலின், அவர்கள் அவன்பால் பகைகொண்டு ஒன்றுகூடிப் போருக்கெழுந்தனர். பாரியும் படைகளோடு சென்று எதிர்த்தான். போர் கடுமையாக நடந்தது. பறம்புமலை முற்றுகையிடப்பட்டது. பல நாட்கள்வரை முற்றுகை நீடித்தமையின், உணவுப் பொருள்களைப் பெற இயலாமல் பறம்பு மலையிலிருந்தோர் துன்பமுறலாயினர். இந்நிலையில் கபிலர் மூவேந்தரெதிர் சென்று, வாள் வலியார் பாரியைக் கைப்பற்ற அவர்கள் செய்யும் முயற்சி பயன்தராது என்றும், பரிசிலராகப் பாடியவரின் பறம்பு மலையையும் கைப்பற்றல் எளிதாம் என்னும், தன்னைப் பாடிவரும் பரிசிலர்க்கு எதனையும் தன்னுயிரையும் இல்லை என்னாது ஈயும் வள்ளலாகிய அவன், தன்னையே பரிசிலாகத் தந்திடுவான் என்றும் இயம்பினார். அவர்களும் அவ்வாறே செய்து பாரியைக் கைப்பற்றிச் சென்று தம் பகையை முடித்துக்கொண்டனர்.

பாரியின் இழப்பால், பறம்பு நாட்டு மக்கள் பட்ட துயரத்துக்கு அளவில்லை. வேடன் அம்பால் எறியுண்ட இளமான்கள்போல, பாரியின் பெண்கள் தந்தையின் பிரிவாற்றாது துன்பமுற்று கண்ணீர் ஆறாய்ப்பெருக்கி அழுதனர். கபிலரோ பெருங்கொடை வள்ளலும் அருட்கடலும் பெறலரும் நண்பனுமாகிய பாரியைப் பறிகொடுத்த பின்னர் உயிர் வாழ்ந்திருக்க வும் மனங்கொள்ளாது, தாமும் அவனுடன் இறக்கத் துணிவு கொண்டனர். எனினும் பாரி மகளிரின் இரங்கத்தக்க நிலைமை அவ்வாறு செய்யவிடாமல் அவரைத் தடுத்தது. "நாமும் இறப்பின் அந்தோ! தந்தையை இழந்து தவிக்கும் இத் தையலர் ஆதரிப்பாரின்றிக் காற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைபுண்ணும் கொழுகொம்பில்லாக் கொடிபோல் தவிப்பரே!" எனக் கலங்கினார். "இவர்களை எங்கேனும் அழைத்துச்சென்று எவர்க்கேனும் மணம் புரிவித்து பின்பு உயிர் துறத்தலே தகுதியாம்" என்றெண்ணி, அவர்களை அழைத்துக்கொண்டு பறம்பு மலையை விட்டுப் புறப்பட்டார். மலையினின்றும் நீங்க மனமின்றி அதன் அழகையும் செழுமையையும் பாரியின் ஆட்சி முறையையும் பன்முறை எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருக்கியவாறு அம் மூவரும் சென்றனர்.

ஒரு சிறு கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் சிறு குடில் ஒன்று. முழுநிலாக் கால இரவு, வெள்ளிய குடத்தினின்றும் பாலை பொழிவது போல், தண் கதிரோன் வெண்ணிலாவை நாற் புறமும் எங்கும் வஞ்சனையின்றி சொரிந்து கொண்டிருக்கிறான். அக் குடிசையின் வெளிப்புறத்தில் கவலைக் குறி படர்ந்த முகத்துடன் சோர்ந்து உட்கார்ந்திருந்தனர் பாரியின் பெண்கள். வெள்ளொளி பரந்த அமைதியான சூழ்நிலையின் அவ்வின்பக் காட்சி, கடந்த திங்களின் முழுமதி நாளன்று பறம்புமலைக்கண் தம் தந்தை உடனிருக்கத் துய்த்த இன்பக் காட்சியை நினைவூட்டியது. உள்ளம் கொதித்தது. கண்களில் நீர் ததும்பியது. "ஆ! சென்ற திங்களில் அந்த நிலாவின்போது, எம் தந்தையோடிருந்தோம்! அருமையான பறம்பு மலையும் எமதாக இருந்தது. இந்தத் திங்களில் இவ் வெள்ளிய நிலவின்போதோ? வெற்றி முரசினுடைய அரசர்கள் எமது மலையைக் கைக்கொண்டு விட்டனர்; நாங்கள் தந்தையையும் இழந்தோம் ஆயினோம் என வருந்திக் கூறினர். அக் கூற்று அச் செந்தமிழ்ப் புலமைச் செவ்வியர் வாயினின்றும்,

அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்
எந்தையும் உடையேம், உம் குன்றும் பிறர் கொளார்;
இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே"

என்னும் பாவாக வெளிப்பட்டது. இச் செய்யுளை அருகில் இருந்த அந்தணர் பெருமகனாகிய கபிலர் செவியுற்றார். அவர் மனம் வெயிலிடைபட்ட புழுப்போல் துடித்தது. "அந்தோ! கொடுமை! கொடுமை!! இம் மகளிரின் வெந்துயர் கண்டும் உயிர் வாழும் நான் துன்பமுறுவேனாக; என் வாழ்நாள் அழிவதாக" என உளம் வெதும்பினார்.

கபிலர் பாரி மகளிரை அழைத்துச் சென்று மலைநாடு சேர்ந்தனர். ஆங்கு விச்சிக் கோன் என்பானை, பாரி மகளிரின் சிறப்பைக்கூறி, அவர்களை மணம் புரிந்துகொள்ளுமாறு வேண்டினார். முடியுடை வேந்தரின் கோபத்துக்கு அஞ்சி அக் குறுநில மன்னன் மறுத்து விட்டான். பின்னர் இங்கோவேள் என்பானுழைச் சென்று கூறினார். அவனும் உடன் பட்டானில்லை. இனி எவர்பால் சென்று வேண்டுவார், பாவம்! "இவர்கள் மணம் முடிய எத்துணை காலம் செல்லுமோ?" எனப் பலவாறு எண்ணி, தமக்குத் தெரிந்த பார்ப்பனப் பெரியார் சிலரிடம், அம் மகளிருக்கு மணம் முடிக்குமாறு கூறி, ஒப்புவித்து தம் நண்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து "இம்மையில் என் நண்பன் என்னைப் பிரிந்து சென்றானாயினும், மறுமையிலேனும் அவனுடன் சேர்ந்து வாழ்தலை விதி கூட்டுவதாக" எனக் கருதியவாறே வடக்கிருந்து தம் நண்பனை நாடிச் சென்றார். பின்னர், பாரி மகளிரும் தகுந்த கணவரையடைந்து நல்வாழ்வு எய்தினார். ஔவையாரின் வரலாற்றுடன் பாரி மகளிர் வாழ்வும் பேசப்பட்டுள்ளது. பாரி மகளிரின் குறிப்பிட்ட செய்யுளில் காணப்படும் அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில், இற்றைத் திங்கள் இவ் வெண்ணிலவில் எனும் சொல்லாட்சி இன்றும் கவிஞர்கள் பயன் படுத்துவதைக் காணமுடிகிறது. காலத்தில் அழியாத செய்யுள்களைத் தந்த மாதரசிகள் என்றும் நினைவில் இருப்பார்கள்.

(தொடரும்...


## சாந்தி பெற...

திரு கு. அருணகிரிநாதன் அவர்கள் கடந்த 22.12.2023 அன்று திடீர் மறைவையிட்டு சந்நிதியான் ஆச்சிரமமும், ஆச்சிரமத்தோடு இணைந்த பேரவையினரும் ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அமரர் இருந்த இறுதிக் காலங்களில் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்து ஆச்சிரம செயற்பாடுகளுக்கும், வாராந்த வெள்ளி நிகழ்வுகளுக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கி அந் நிகழ்வு களை மெருகேறச் செய்த பெருந்தகை யாளன்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற சந்நிதி வேலவனை வேண்டு வதோடு அமரரின் பிரிவால் துயருற் றிருக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரி வித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம சங்கீர்த்தனமே இந்த கலியுகத்துக்கு உகந்த வழிபாட்டுமுறை

– திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள் –

"நாம சங்கீர்த்தனம்" இந்த கலியுகத்துக்கு உகந்த யுகதர்மம் திரேதா யுகத்தில் தங்கமாக இருந்தது. கலியுகத்தில் இரும்பாக ஆகிவிட்டது. தியானம், ஹோமம், பூஜை ஆகியவற்றில் ஈடுபாடு குறைந்து கலியுகத்தில் ஆலயத்துக்குச் செல்லவே தூண்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த யுகத்தில் நாம் எல்லோரும் இணையவேண்டியது ஆலயங்களில் சேர்ந்து சொல்லவேண்டியது நாம சங்கீர்த்தனமே. ஆன்மாவை நெறிப்படுத்த வல்ல பக்தி சாதனம்.

தற்பொழுது பக்தி முறைகளில் ஈடுபட மக்களுக்கு தகுந்த யோக்கிய தாபீசம் இல்லை. மக்களுக்கு செலவுசெய்ய பணமோ, ஈடுபடப் பொறுமையோ இல்லை. அவர்களுடைய கவலைகளுக்கு இடையே ஆழ்ந்து யோசித்து மனதை நிலைநிறுத்தவும் முடியாது. மக்களுக்கு நீண்ட ஆயுள் இல்லை. மக்களிடையே சுறுசுறுப்பு இல்லை. அப்படி இருந்தாலும் அது பக்தி வழிபாட்டில் இல்லை. ஆகையால் பிறர் செய்யும்போது தாங்களும் கூட இருந்து செய்யக்கூடிய வழிபாட்டு முறையையே மக்கள் விரும்புகிறார்கள். அதுதான் சாத்தியமானதும்கூட. அப்படி அமையக் கூடியதுதான் நாம சங்கீர்த்தனம்.

அதற்குப் பல மொழிகளோ, அர்த்தமோ தெரிய வேண்டியதில்லை. கிரமம் இல்லாமல் ஈடுபட முடியும் பயிற்சி மிகவும் சுலபமானது. பாடும்போது மனம் பிற சிந்தனைகளில் ஈடுபடாது ஒரே மாதிரி பக்தி உணர்வுடன் பலரும் ஈடுபடுவதால் சத்சங்கம் நிச்சயமாக ஏற்படும். இதற்கு அதிகமான கல்வி அறிவு தேவையில்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை, உயர்குலம், தாழ்ந்தகுலம் போன்ற வித்தியாசங்கள் எதுவுமே இல்லை. எவரும் எந்த நேரத்திலும் இணைந்துகொண்டு செய்யக்கூடிய பிரார்த்தனைதான் நாம சங்கீர்த்தனம்.

நாம சங்கீர்த்தனம் உதட்டிலிருந்து வருவது மட்டுமல்ல, அது இதயத்திலிருந்து வர வேண்டும். அப்போதுதான் வார்த்தைகளும் சந்தமும் தவறாமல் இருக்கும். இதை மனதாரப் பாடினால் போதும். அழகான முறையில் நயமான குரலில் பாடவேண்டிய கட்டாயம் இல்லை. பஜனை, கீர்த்தனைகள் தெரிந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இது நன்றாகச் சேர்ந்து பாடுவது. அதனாலேயே சங்கீர்த்தனம் என்று சொல்லப்படுகின்றது. வாய்விட்டு உரக்கப் பாட வேண்டும். அப்போதுதான் வெட்கம், தடுமாற்றம் ஆகியன நீங்கும். மற்றவர் வழியில் செல்லுவதால் "நான்" என்ற அகந்தையின் தன்மை நீங்கும். அப்படி வாய்விட்டுப் பாடும்போது நல்ல எண்ணங்கள் காற்றில் பரவும். இந்தத் தூய்மை எல்லோருக்கும் நன்மை செய்யும்.

தவறிப் போய்க் கிணற்றில் விழுந்தவன் என்ன செய்கிறான்? மெதுவாக மனதுக்குள் பேசுவதில்லை. வாய்விட்டு உரக்கக் கூவுகிறான். அதுபோல் உலக பந்தங்களிலும், மாயையிலும் சிக்கிக்கொண்ட ஒருவன் தப்பித்துக்கொள்ளக் கடவுளை வாய்விட்டுக் கூவி அழைக்க வேண்டும் கடைசி காலத்தில் உயிரைத் துறக்கும்போதுகூட அவரைக் கூவி அழைத்தால் வருவார். எனவே கலியுகத்தில் நல்லவண்ணம் வாழ நாம சங்கீர்த்தனம் செய்வோம் வாரீர்!

***நினைப்பதை சரியாக நினைத்தால் நடப்பதும் சரியாகவே நடக்கும்.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த திருவாசக விழா - 2023

– தொகுப்பு –

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் அட்டவணைப் பிரகாரம் மார்கழி மாதத்தில் வரும் திருவெம்பாவை காலத்தில் நடைபெறும் திருவாசக விழாவானது கடந்த 26.12.2023 செவ்வாய்க்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்றையதினம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத்






தொடர்ந்து நடராஜர் மற்றும் நாயன்மார்களின் திருவுருவங்களும், திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக சந்நிதி ஆலயத்திலிருந்து அடியார்களின் சிவபுராண ஓதுதலுடன் ஆச்சிரமத்துக்கு எடுத்து வரப்பட்டு, ஆச்சிரம சுவாமிகளால் கற்பூர ஆராதனை காட்டப்பட்டு விழா மேடைக்கு கொணடு செல்லப் பட்டது.

*செயல்புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் துணை நிற்காது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசக விழா பற்றிய அறிமுக உரையை திரு இரா. செல்வவடிவேல் ஆசிரியர் நிகழ்த்தியதைத் தொடர்ந்து,









சிறுப்பிட்டி நாகதம்பிரான் அறநெறிப்பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் அடியார்களைக் கவரும் வண்ணம் இடம்பெற்றது.


அதனைத் தொடர்ந்து உளவளத் துணையாளர் திரு நா. நவராஜ் அவர்கள் "மழக் கையிலங்கு பொற்கிண்ணம்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அவர் கூறிய திருவாசகம் சம்பந்தமான கருத்துக்கள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது.



அடுத்த நிகழ்வாக "இசை நாவரசு" M.S. பிரதீபன் அவர்களது திருவாசக இன்னிசை ஜனரஞ்சகமாக அமைந்திருந்தது. அவரது இசையை அணிசேர் கலைஞர்களாக இருந்து மெருகேற்றியவர்களான N. செல்வச்சந்திரன், கே. தேசிகன், M. லோகேந்திரன், N. கேதாரநாத் ஆகியோர்களது பக்க வாத்திய இசைகள் மென்மேலும் அவரது திருவாச பாடல்களை கேட்கவேண்டும்போல் எல்லோரது ஒருமித்த கருத்ததாக அமைந்திருந்தது ஒரு போற்றத்தக்க விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனைத் தொடர்ந்து இளைப்பாறிய அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்களது நன்றியுரையோடு விழா முற்றுப்பெற்றது.



*சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல. ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்...

அப்பாண்ணா என்று யாவராலும் அன்போடு அழைக்கப்பட்ட திரு கு. அப்பாத்துரை அவர்கள் 14.12.2023 அன்று அமரரான செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோம். உண்மையில் அவர் சமூகத்திற்கும், சமயத்திற்கும் கல்வி சார்ந்த பல விடயங்களுக்கும் தன்னாலான பங்களிப்பை செய்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற சிந்தனையாளன்.



அமரர் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொண்டுவந்த மருத்துவ சேவையின் நிமித்தம் சேவையாற்றவரும் வைத்தியர் களோடு இணைந்து வந்து அப்பணிக்கு முதுகெலும்பாக விளங்கி, மருத்துவ சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கு பெரும் பங்காற்றிய பெருந்தகையாளர்.

சந்நிதியான் ஆச்சிரம பேரவையினால் பல வருடங்களாக வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் மலருக்கு ஆரம்ப காலங்களில் ஆக்கங்களை வழங்கி அதன் மூலமும் பெருமை பெற்று பேரவையினால் கௌரவிக்கப்பட்ட ஒருவர். படிப்படியாக சுவாமி அவர்களோடு இணைந்து ஞானச்சுடர் மலருக்குரிய ஆக்கங்களை தெரிவு செய்வதிலும் கட்டுரைகளை ஒப்பு நோக்கும் விடயத்திலும் பெரும் பங்காற்றிய பண்பாளர். அவரின் மறைவு ஞானச்சுடர் மலரின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகவே கருதவேண்டி உள்ளது. இத்தகைய செயற்பாடு உள்ளவரின் ஆத்மா சந்நிதி வேலவனின் பாதார விந்தங்களில் சாந்திபெற வேண்டுகின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

**05.01.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"பண்ணிசை"**

(பக்கவாத்திய சகிதம்)

**வழங்குபவர் :- திரு சி. தில்லைமணி** அவர்கள்

[நல்லை ஆதீன ஓதுவார்]

---

**12.01.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**19.01.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல்** அவர்கள்

[ஆசிரியர்]

---

**26.01.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திரு சு. தேவமனோகரன்** அவர்கள்

[சைவப்புலவர்]

**மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் J.P.** அவர்கள்

[இளை. அதிபர்]

**313 ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: **DOP/NEWS/103/2023**

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org